# திராவிடஇயக்கமும், 'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கமும்



முனைவர் **வா.நேரு**

**கட்டுரைச் சுருக்கம்:**

மனிதர்கள் உரிமைகளுக்காகக் காலந்தோறும் அமைப்புகளாகத் திரண்டு போராடுகிறார்கள்; வெற்றி பெறுகிறார்கள். இன்றைய 2020 காலகட்டத்தில், உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் இயக்கங்களுள் குறிப்பிடத்தக்கவை: 'கருப்பின உயிர்களும் உயிர்களே' (கூடயஉம டுளைநள ஆயவவநச) இயக்கமும், திராவிட இயக்கமும் ஆகும். இவ்விரு இயக்கங்களைப் பற்றியும் இக்கட்டுரை ஒப்பிட்டு ஆய்கிறது. அமெரிக்காவிற்கு வரவழைக்கப்பட்ட கருப்பு நிறத்தவர்கள், வெள்ளை நிறத்தவர்களால் வஞ்சிக்கப்பட்ட வரலாற்றோடு, திராவிட மண்ணின் ஆதிகுடிகளான திராவிடர்கள், ஆரியர்களால் வஞ்சிக்கப்பட்ட வரலாற்றை ஒப்புநோக்கி, அந்த வஞ்சகத்திற்கு எதிராகத் திராவிட இயக்கம் ஒரு நூற்றாண்டுக்கு முன் எப்படித் தோன்றி, என்னென்ன சாதனைகள் ஆற்றியது என்பதையும், இக்கட்டுரை விவரிக்கின்றது. சமூக ஊடகங்களில், 'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கத்திற்கு ஆதரவாகத் திரண்டவர்கள், கருப்பினத்தவர்கள் மட்டுமேயல்லாமல், மனிதநேய நாட்டம்கொண்ட வெள்ளை நிறத்தவரும் மற்றவர்களும் கூட ஆதரிக்கும் போக்கினைச் சுட்டி, போலவே தந்தை பெரியாரையும், திராவிட இயக்கத்தையும் சமூக ஊடகங்களில் பல வகைப்பட்ட இளைஞர்களும் கொண்டாடுவதை இக்கட்டுரை கவனித்தில் கொள்கிறது. தங்கள் முன்னோர்களுக்கு ஏற்பட்ட கொடுமைகளைப் படித்தறியும் கருப்பின இளைஞர்களின் உடல் மொழியைக் குறிப்பிட்டு, போலவே சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்னும் இழிவு தமிழர்களுக்கு ஏற்பட்ட நிலையை இக்கட்டுரை சுட்டுகிறது. திராவிடக் கருத்தியலுக்கு இன்றைய ஆய்வுகள் பெருந்துணை புரிவதையும், சிந்துவெளி நாகரிகம், கீழடி மரபணுவியல் ஆய்வுகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, ஆரியம் விதைத்த ஜாதி எனும் திட்டம் ஒழியவேண்டிய தேவையை வலியுறுத்தி, காலந்தோறும் மாறி வரும் போராட்டக் கருவிகளுள், இன்றைய போராட்டக் கருவியாகத் திகழும் சமூக ஊடகம் மூலமாக, இரு இயக்கங்களிலும் நிகழும் அடுத்தகட்ட நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்க, இக்கட்டுரை தூண்டுகிறது.

**முன்னுரை:**

"பழைய முறைப்படி உள்ள அமைப்புகளால் இலாபமடையும் கூட்டம், புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பது இயற்கை. ஆனாலும் பாமரனின் ஞானசூன்யம், சுயநலக்காரனின் எதிர்ப்பு எனும் இரண்டு பெரிய விரோதிகளைக் கண்டு கலங்காமல், வேலை செய்பவரே, இனி வரும் உலகச் சிற்பிகளாக முடியும்." தந்தை பெரியார் - (இனிவரும் உலகம் - பக்கம் 22).

நிகழ்காலத்தில் உலகின் கவனத்தை ஈர்க்கும் இயக்கங்களுள் ஒன்று 'கருப்பின உயிர்களும் உயிர்களே' (BLACK LIVES MATTER) என்னும் இயக்கமாகும். ஆர்ப்பரித்து வரும் வெள்ளம் பள்ளத்தாக்கைக் கண்டதும் நீர்வீழ்ச்சியாகப் பாய்ந்து, அவ்விடத்தில் இருக்கும் அழுக்குகள் அனைத்தையும் அடித்துச் சிதைத்து அப்புறப்படுத்துவது போல, அமெரிக்க வெள்ளையர்களின் மனதில் இருக்கும் நிறவெறி அழுக்கை நீக்குவதற்காக கருப்பின மனிதர்கள் அனைவரும் ஒன்றிணைந்துகருப்பின உயிர்களும் உயிர்களே (Black lives matter) என்று எழுப்பிய முழக்கம் அமெரிக்காவின் அனைத்து மாநிலங்களில் மட்டுமல்ல; கண்டம் கடந்து பல நாடுகளில் எதிரொலித்த – எதிரொலிக்கும் முழக்கம் ஆகும். அந்த முழக்கத்தின் எதிரொலி யூ டியூப் காணொலிகளாக, கவிதைகளாக, ஒட்டுமொத்தத் திரளாகத் திரண்ட மனிதர்களின் இடியென முழங்கும் குரலோசையாக ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது.இது இன்று நேற்று தொடங்கிய கொடுமைக்கு எதிரான முழக்கம் அல்ல; பல நூற்றாண்டுகளாகத் தொடரும் கொடுமைகளுக்கு எதிரான குரல். அமெரிக்க வெள்ளையர்களின் நிறவெறிக்குச் சற்றும் குறையாமல், இந்தியாவில் ஜாதிவெறி இருக்கிறது. அந்த ஜாதிவெறி, பெற்ற மகளை, இன்னொரு ஜாதியைச் சார்ந்தவரைத் திருமணம் செய்து கொண்டார் என்பதற்காக வெட்டிக்கொலை செய்யும் அளவிற்கு வெறித்தனமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் இருக்கிறது. ஜாதி என்றால் என்ன? அது எப்படித் தமிழர்களின் மனங்களிலே புகுத்தப்பட்டது, யாரால் புகுத்தப்பட்டது? என்பதனை மக்களுக்கு தனது வாழ்நாள் முழுவதும் விளக்கியும், ஜாதி ஒழிப்பினை, பெண்ணடிமை ஒழிப்பினைத் தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த, திராவிட இயக்கத்தின் தந்தை பெரியாரும், அவரது திராவிட இயக்கமும் இன்றைய சமூக ஊடகங்களில் கொண்டாடப்படுவதோடு, திராவிட இயக்கக் கருத்தியலை நோக்கி இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக வருகின்ற இந்தக் காலகட்டத்தில், கருத்தியல் அடிப்படையில் 'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கத்தையும், திராவிட இயக்கத்தையும் ஒப்பிட்டும், இரண்டு இயக்கங்களும் வேறுபடும் இடங்களையும் கருத்தில்கொண்டு, எதிர்கால இனிவரும் உலகைப் பற்றி சிந்திக்கச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சமூக ஊடக விவாதத்தில் பிறந்த கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கம் எளிய மனிதர்கள், பாதிக்கப்படுபவர்கள் தங்கள் கோபத்தை, இயலாமையை, அரசுகளின் அநீதியை விவாதிக்கும் ஓர் இடமாக சமூக ஊடகங்களை நவீன அறிவியல் கொடுத்திருக்கிறது. சென்ற நூற்றாண்டில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு இது. மின்னஞ்சல், குறுஞ்செய்தி போன்ற செய்தித் தொடர்புகள் 2005களுக்குப் பிறகு விரிவடைந்து இன்றைக்கு வாட்ஸ்அப், ஃபேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், வலைத்தளம் எனப் பல தளங்களை, விவாதிக்கும் தளங்களாக, உண்மைகளை வெளிச்சம் போட்டுக்காட்டும் திரைகளாக மக்களுக்கு அறிவியல் கொடுத்திருக்கிறது. பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புவது, பின்பு அது வெளியிடப்படும் வரை காத்திருந்து படிப்பது என்பது மாறிவிட்டது. மனதில் நினைத்தவுடன் எழுதுவது, எழுதுவதை உடனே சமூக ஊடகங்களில் பதிவது என்பது எல்லோருக்கும் வாய்ப்பை அளிக்கிறது. பதிவு செய்த கருத்திற்கு வரும் ஆதரவு, எதிர்ப்புக் கருத்துகளை உடனுக்குடனே தெரிந்து கொள்வது, அதற்கு விளக்கம் அளிப்பது என்று சமூக ஊடகங்கள் ஒரு தொடர் கருத்துப் பகிர்வுக்கான வாய்ப்பினை அளிக்கிறது.

**கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கம்:**

அப்படி 2013இல் ஃபேஸ்புக்கில் மூன்று பெண்கள் – அலிசியா கார்ஸா (Alicia Garza), பேட்ரீஸ் குலர்ஸ் (Patrisse Cullors), ஒபல் டோமெட்டி (Opal Tometi) ஆகிய மூவரும் கருப்பு இனத்தைச் சார்ந்தவர்கள், அமெரிக்காவில் அநியாயமாக கருப்பு இனத்தவர்கள் கொல்லப்படுவதையும், அதற்கு அரசும், போலிசும், சட்டங்களும், நீதிமன்றமும் துணை போவதைப் பற்றியும் விவாதிக்கிறார்கள். 2012பிப்ரவரி 26ஆம் நாள், 17 வயதே நிரம்பிய அமெரிக்க – ஆப்பிரிக்கச் சிறுவன் டிராய்வொன் மார்ட்டின் (Trayvon Martin), வெள்ளை நிறத்தவரான ஜார்ஜ்ஜிம்மர்மேன் (George Zimmerman) என்பரால் சுட்டுக்கொல்லப்பட்டான். ஓராண்டு காலம் நடந்த நீதி விசாரணைக்குப்பின், ஜார்ஜ் ஜிம்மர்மேன் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்படுகிறார். (கீழ்க்கண்ட விக்கிபீடியா தளம் விரிவான

தகவல்களைத் தருகிறது. https://en.wikipedia.org/wiki/Shooting_of_Trayvon_Martin#County_medical_examiner's_autopsy_report).

அநியாயமாகச் சுட்டுக்கொல்லப்பட்டானே - டிராய்வொன் மார்ட்டின். அவனது படுகொலைக்கு நீதி இல்லையே என்பது இவர்களுக்குக் கோபமூட்டுகிறது, ஆத்திரம் கொள்ள வைக்கிறது. ஃபேஸ்புக்கில் கருத்துகளைப் பகிர்கின்றார்கள். அலிசியா கார்ஸா எல்லா உயிர்களும் முக்கியம். கருப்பின உயிர்களும் உயிர்களே" என்று ஃபேஸ்புக்கில் எழுதுகிறார். உடனே பேட்ரீஸ் குலர்ஸ் #Black lives matter என்று எழுத, இது சரியென ஒபல் டோமெட்டி ஒப்புதல் அளிக்க, #Black lives matter என்னும் இயக்கம் பிறக்கிறது. இந்த மூவரும் #Black lives matter என்னும் ஹேஷ்டேக்கின் கீழ், தங்கள் கருத்துகளை எழுத ஆரம்பிக்கின்றார்கள். # ஹேஷ்டேக் என்று சொல்லப்படுகின்ற இந்தக் குறியீடு ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழே பலர் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்ய வழிவகுப்பது. அந்த வகையில் #Black lives matter என்னும் ஹேஷ்டேக் தலைப்பின் கீழ் 'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கம், சமூக ஊடகத்தின் வழியே பிறந்து, சமூக ஊடகத்தின் வழியாகவே விரிவடைகிறது. ருஷ்யாவின் புரட்சிக்கு மாக்சிம் கார்க்கியின் தாய் நாவல் துணை புரிந்தது போல, அமெரிக்காவில் எழுந்த கருப்பு இனத்தவர்களின் எழுச்சிக்குச் சமூக ஊடகங்களே அடிப்படை. ஊடகத்தின் வழியே விரிவடையும் இந்த இயக்கத்தின் செயல்பாடு Blacklivesmatter.com என்னும் இணையதளம் தனியே பிறக்க வழி வகுக்கிறது. வெள்ளை நிறத்தவர்களின் ஆதிக்கத்தை ஒழிப்பது, கருப்பின மனிதர்கள் மீது நடத்தப்படும் வன்முறையைக் தடுப்பதற்காக ஒன்றிணைவது, ஒன்றிணைவதன் மூலமாகக் கருப்பின மனிதர்களின் கற்பனை வளத்தை, புதியன செய்ய விரும்பும் விருப்பத்தை நிறைவேற்றுவது, கருப்பின மனிதர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு, கருப்பின மனிதர்களின் வாழ்க்கையை மேம்படுத்த ஒன்றிணைவது, அதன் மூலமாக உடனடியான கருப்பின மனிதர்களின் வாழ்க்கை மேம்பாடு என்னும் இலட்சியமே தங்களின் இலட்சியம் என கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கத்தின் இணையதளம் குறிப்பிடுகிறது. ("#BlacklivesMatter was founded in 2013 in response to the acquittal of Trayvon Martin's murder. Black Lives Matter Global Network Foundation is a global foundation supporting Black led movements in the US, UK, and Canada, whose mission is to eradicate white supremacy and build local power to intervene in violence inflicted on Black communities by the state and vigilantes. By combatting and countering acts of violence, creating space for Black imagination and innovation, and centering Black joy, we are winning immediate improvements in our lives"). கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கத்திற்குத் தலைவர், செயலாளர் என்பன போன்ற பொறுப்புகளைக் கொண்ட முறையான அமைப்பு முறை இல்லை. எல்லோரும் தலைவராகவும், எல்லோரும் தொண்டராகவும் இருக்கும் ஓர் அமைப்பு முறையாக அவர்கள் இருக்கிறார்கள். அநீதி கண்டு வெகுண்டெழுந்து ஆர்ப்பரித்துப் போராடாமல் அநீதி களைய முடியாது" என்னும் முழக்கத்திற்கு ஒப்ப, தங்களுக்குள் சமூக ஊடகங்களின் வழியே விவாதித்துக் கொண்டு இருந்த "கருப்பின உயிர்களும் உயிர்களே" இயக்கத்தவர்கள், 2014இல் இரண்டு அமெரிக்க - ஆப்பிரிக்கர்கள் மைக்கேல் பிரவுன் (Michael Brown) மற்றும் எரிக் கார்னர் (Eric Graner) கொல்லப்பட்டதை எதிர்த்து, தெருக்களில் இறங்கி, போராட ஆரம்பிக்கிறார்கள். மக்களை ஒருங்கிணைக்கவும், ஓரிடத்தில் கூடி முழக்கங்கள் எழுப்பவும், அநீதிக்கு எதிராக அமெரிக்காவின் தெருக்களிலே ஒன்று கூடவும் 'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கம் முன்னெடுப்புச் செய்கிறது. அமெரிக்க மக்களின் கவனத்தை இந்த இயக்கம் ஈர்க்க ஆரம்பிக்கிறது. அதனைத் தொடர்ந்து உலகளாவிய இயக்கமாக, அமெரிக்கா, அய்ரோப்பா, கனடா எனப்பல நாடுகளில் இருக்கும் கருப்பு இனத்தவர்கள் தங்கள் உரிமைக்காக குரல் கொடுக்கும் இயக்கமாகக்கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கம் உருவெடுத்தது.

**என்னால் மூச்சு விட முடியவில்லை:**

ஜார்ஜ் பிளாய்ட் (George Floyd) என்னும் அமெரிக்க ஆப்பிரிக்கர் தன்னுடைய இறப்பிற்குச் (மே 25,2020) சில வினாடிகளுக்கு முன்வரை உச்சரித்த"என்னால் மூச்சுவிட முடியவில்லை" என்னும் சொற்கள் அமெரிக்க மக்களை மட்டுமல்ல, அந்த நிகழ்வைப் படித்த, பார்த்த அனைவரையும்

உலுக்கிய நிகழ்வு ஆகும். கருப்பு நிறத்து மனிதரான ஜார்ஜ்பிளாய்ட்டைக் கீழே படுக்க வைத்து, அவரது கழுத்தில் தனது முழங்காலை வைத்து அழுத்திக் கொலை செய்தார், வெள்ளை நிறத்துக் காவல்துறை அதிகாரி டெரிக் சார்வின் (Derrick Chauvin). டெரிக் சார்வின் இரண்டாம் நிலை கொலைக் குற்றச்சாட்டின் அடிப்படையில் விசாரிக்கப்பட்டது மிகப்பெரிய கொந்தளிப்பை அமெரிக்க மக்களிடையே ஏற்படுத்தியது. மே 2020 இறுதியில் தொடங்கிய ஜார்ஜ் பிளாய்ட் கொலைக்கு எதிரான 'கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கம் எடுத்த போராட்டம், இதுவரை அமெரிக்க வரலாற்றில் நிகழாத நிகழ்வாக பல இலட்சம் மக்கள் ஒன்றிணைந்து தெருக்களில் இறங்கிப் போராடிய தொடர் போராட்டமாக அமைந்தது. கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கம் அமெரிக்க வெள்ளை மாளிகைக்கு எதிரில் ஆர்ப்பாட்டம் நடத்தி, முழக்கங்களை எழுப்பிய நேரத்தில் அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அவர்கள் பதுங்கு குழியில் பதுங்கிக் கொண்ட வரலாறு இதுவரை காணாத வரலாறு.இன்று உலக அளவில், பல நாடுகளில் இருக்கும் அமைப்பாகக்கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கம் இருக்கிறது.

### ஆதிக்கத்திற்கு எதிராக முகிழ்த்த திராவிட இயக்கம்:

திராவிடஇயக்கத்தின்தோற்றம்100ஆண்டுகளுக்கு முந்தையது.ஆரியப்பார்ப்பனர்களின்ஆதிக்கத்திற்கு எதிராக திராவிட மண்ணில் தோன்றிய இயக்கம் திராவிட இயக்கம். இருபதாம் நூற்றாண்டின் துவக்க காலம்; குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால் – 1912ஆம் ஆண்டு! சென்னை நகரில் பணியாற்றிய அரசு ஊழியர்கள் சிலர், தாங்கள் பிராமணரல்லாதாராய் இருந்த ஒரே காரணத்தாலேயே உத்தியோகத்துறையில் புறக்கணிக்கப்பட்டதையும், வேலை – உயர்வு போன்ற நியாயமாகக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் மறுக்கப்பட்டதையும் உணர்ந்து, மனம் புழுங்கிக் கலந்துரையாடவும், இணைந்து செயல்படவும், ஒன்றுபட்டுத் தங்கள் குறைகளை எடுத்துரைக்கவும் 1912ஆம் ஆண்டு மெட்ராஸ் யுனைட்டெட் லீக் (Madras United League) என்னும் அமைப்பினை உருவாக்கினர்."[1] என்று முரசொலி மாறன் குறிப்பிடுவார். ஆலமரமாய் வளர்ந்து கிளை பரப்பி, அளப்பரிய சாதனைகளைச் செய்து நிற்கும் திராவிட இயக்கத்தின் தோற்றம் ஏறத்தாழ 108 ஆண்டுகளுக்கு முன்னால். அன்றைய நிலையில் – இன்று இருப்பதுபோல மின் ஊடக வசதிகள் இல்லாத நிலையில் – தங்களுக்கு எதிராகச் செயல்படும் ஆரியப் பார்ப்பனர்களை எதிர்ப்பதற்கு மெட்ராஸ் யுனைட்டெட் லீக் அமைப்பினை டாக்டர் நடேசனார் நிறுவினார். "அவர்தாம் திராவிட இயக்கத்தின் நிறுவனர்" என்று முரசொலி மாறன் குறிப்பிடுகிறார். 1913ஆம் ஆண்டு 'மெட்ராஸ் யுனைட்டெட் லீக்கின் முதலாவது ஆண்டு நிறைவு விழாக்கூட்டத்தில், மெட்ராஸ் யுனைட்டெட் லீக்'என்னும் பெயரைத்'திராவிடர் சங்கம் (Dravidian Association) என்று மாற்றுவதென்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.திராவிடர் சங்கம் தோன்றிய ஒரு நூற்றாண்டு கழித்து,தங்களுக்கு எதிராக இருக்கும் அமெரிக்க வெள்ளையர்களை எதிர்த்துச் சமூக ஊடகத்தின் வழியாகத் தோன்றிய இயக்கம் கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கமாகும். எனவே ஆதிக்கத்திற்குக்எதிராகக்கருப்பின உயிர்களும் உயிர்களே போன்ற இயக்கங்கள் தோன்றுவதற்கு முன்னோடியான இயக்கம் திராவிட இயக்கம் எனக் குறிப்பிடலாம்.

### சமூக ஊடகங்களில் திராவிட இயக்கம்:

திராவிட இயக்கத்தின் தத்துவக்குறியீடு தந்தை பெரியார். தனது தியாக வாழ்க்கையால் பொது வாழ்க்கைக்கு வருகின்றவர்களுக்கு எடுத்துக்காட்டானவர். பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும், எளிய வாழ்க்கையால் எல்லோரையும் ஈர்த்தவர். வைக்கம் போராட்டத்தில் கைகளில், கால்களில் விலங்கிடப்பட்டு, சிறைப்படுத்தப்பட்டபோதும் கொள்கையில் உறுதியாக நின்றவர். வைக்கம் தெருக்களில் ஆடுகள் நடக்கலாம், மாடுகள் நடக்கலாம். ஆனால், மனிதர்கள் நடக்கக்கூடாதா? என்னும் கேள்வி மூலம் வைக்கம் வீரர் என்று புகழப்படுபவர்.தன்னை விட வயதில் குறைந்தவர்களுக்கும் மரியாதை காட்டியவர். மாற்றுக் கருத்து உள்ளவர்களையும் மதித்தவர். "சொல்வது மட்டுமே எனது செயல். நான் சொல்வது சரியா – தவறா என உனது அறிவு கொண்டு சிந்தித்து, சரி என்றால் ஏற்றுக்கொள்; தவறு என்றால் விட்டு விடு" என்று சொன்னவர். பெண் விடுதலைக்கான கருத்துகளை எவருக்கும்

அஞ்சாமல், எதார்த்த நிலையில் எடுத்து வைத்தவர். இவை தனது உடல், உயிர் பற்றிக் கவலைப்படாமல், உழைக்கும் மக்களுக்கு உண்மை தெரியவேண்டும் என்பதற்காக உழைத்தவர். தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகில் உள்ள நியாயமான போராட்டக்காரர்கள் அனைவரும் கையில் ஏந்தும் படமாக, அதன் மூலம் பாடமாக இருப்பவர். அப்படிப்பட்டவரின் 142 ஆம் ஆண்டு பிறந்த நாள் இந்த ஆண்டு, செப்டம்பர் 17,2020 நாள் உலகெங்கும் கொண்டாடப்பட்டது.சிறு நரிகள் சிலர், பெரியாரைக் கொச்சைப்படுத்துகிறேன் என்று ஒரு ஹேஷ்டேக்கை டுவிட்டரில் இட்டார்கள். சினந்து எழுந்த திராவிடர்கள், #HBD PERIYAR142 என்ற தலைப்பின் கீழ், தங்கள் நன்றியுணர்ச்சியைத் தொடர்ச்சியாகப் பதிவு செய்தார்கள். இந்திய அளவில் டிரெண்டாகி முதல் இடத்தில் வந்தது. இன்றும் கூட டுவிட்டரில் சென்று பார்க்கலாம். பெண்கள் தங்கள் உரிமைக்காகப் போராடியவர் என்று கொண்டாடுவதையும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பழங்குடி மக்கள் என ஆரியர் தவிர்த்த அனைத்து மக்களும் "எங்கள் தலைவர், எங்கள் திராவிடத்தின் தந்தை" என்று கொண்டாடியதைப் பார்க்கலாம். எதிர்க்கருத்து கொண்டோர் பதிவிட்ட சில வசவுகளையும் பார்க்கலாம். ஆனால், போற்றுவார் எண்ணிக்கையை விட மிகமிகக்குறைவானது தூற்றியோர் எண்ணிக்கை. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று, இந்தி எதிர்ப்பு – சமஸ்கிருத எதிர்ப்பு.

"சீர்மிகுந்த நாட்டினிலே / இந்தி எதற்கு?/

சிக்கலினை வளர்ப்பதற்கு / ஆட்சி எதற்கு/...
வம்பு செயும் தீங்குடை/

இந்தி எதற்கு?/ வளரும் தலைமுறையை/

ஒழித்துக்கட்டவா?.. அருவருப்பு வறுமையினை/
அறுக்க மாட்டாமல்/

அதிகார வாள்எடுத்தே/ அச்சுறுத்தல் ஏன்?..
கரும்பிருக்க கனியிருக்க/

வேம்பும் எதற்கு?

கன்னித் தமிழ் இருக்க/

இந்திக் கழுதை எதற்கு?.. வாழ்வுயர்த்தும்
தாய்மொழியின்/

வன்மை இருக்க/ வடமொழியின் வைப்பாட்டி/

இந்தி எதற்கு?....

தமிழ்மொழிக்கே உலகையாளும்/

தகுதியிருக்கு/

தமிழ்மகனே இந்திப் பாம்பின்/

தலையை நறுக்கு"

என்பது திராவிடக்கவிஞர், புரட்சிக்கவிஞர் அவர்களின் கவிதை வரிகள். தமிழகத்தில் நடந்த 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டமும், 1965இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டமும் மிக வலிமையானவை. திராவிடர் இயக்கத்தை ஆட்சியில் அமர்த்திய போராட்டம் என்றே 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் குறிப்பிடலாம்.

சில நாள்களுக்கு முன்னால் இந்தி தெரியாது போடா என்று அச்சிட்ட பனியனுடன் இந்தி தெரியாது போடாஎன்னும் ஹேஷ்டேக் டுவிட்டரில் டிரெண்டானது. இலட்சக்கணக்கான பதிவுகள் இந்தி தெரியாது போடா என்று பதிவாகின. தமிழகத்தில் இருந்து இந்தி தெரியாது போடா என்று பதிவு, கேரளா,கர்நாடகா, வட மாநிலங்களில் இருந்து இந்தி தெரியாது போடா என்று பதிவு, உலகம் முழுவதும் இந்தி தெரியாது போடா என்னும் பதிவு, ஒரு வாட்ஸ்அப் பதிவில் கருப்பு இனத்தைச்சார்ந்த ஆண்களும் பெண்களும் அவர்களது உச்சரிப்பில் இந்தி தெரியாது போடா என்று உச்சரித்த பதிவு என்று மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது.

ஆனால் இன்றைக்கு நடைபெறக்கூடிய மத்திய பி.ஜே.பி. ஆட்சி நாளும் இந்தி மொழியைத் திணிக்கும் வேலையைச்செய்கிறது. தமிழக முதல்வர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் தாயார் மறைவிற்கு இரங்கல் செய்தி அனுப்பிய மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா இந்தியில் கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறார். அதற்கு எதிர்ப்பினை அ.தி.மு.க.வின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான திரு.பொன்னையன் அவர்கள் 16.10.2020 அன்று பதிவு செய்திருக்கிறார். இறப்புக்கு இரங்கல் செய்தி அனுப்புவதில் கூட இந்தி மொழி ஆதிக்கம்.தாங்க முடியாத அளவிலான இந்தி திணிப்பு எதிர்ப்பு வெறி,இந்தி தெரியாது போடா என்று மக்களைப்பதிவிடச் செய்ய வைத்திருக்கிறது.

தந்தைபெரியாரின் பிறந்த நாளை டுவிட்டரில் நன்றி உணர்ச்சியோடு பதிவு செய்த அத்தனை பேரும் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அல்லர். அதனைப்போல இந்தி தெரியாது போடா என்று பதிவிட்டவர்கள் அனைவரும் திராவிட இயக்கத்தைச்சார்ந்தவர்கள் அல்லர். நியாயமான கோரிக்கை, ஒரு தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் அனைவரையும் இணைப்பது போல, நியாயமான ஒரு சமூக ஊடக # (ஹேஷ்டேக்) அனைவரையும் ஒன்றிணைக்கிறது.

**கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கத்தின் உடல்மொழியும் காரணமும்:**

கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கத்தின் போராட்டங்கள் யூ டியூப் வழியாக ஒளி பரப்பப்பட்டன. இப்போதும் நம்மால் பார்க்க இயலுகிறது. அதில் கிம்பிளி ஜோன்ஸ் (Kimberly Jones) என்னும் ஆப்பிரிக்க பெண்மணி, கோபத்தோடும் ஆத்திரத்தோடும் ஆற்றும் உரை கிடைக்கிறது. இணைப்பு (https://www.youtube.com/watch?v=llci8MVh8J4). நானூறு ஆண்டுகளாகப் பொருளாதார ரீதியாக எங்களை ஒன்றும் இல்லாமல்தானே வைத்திருக்கிறீர்கள் என்று உணர்ச்சியோடு பேசுகிறார். அவரது உரையைக் கேட்பதோடு, அமெரிக்க ஆப்பிரிக்கர்களின் வரலாற்றையும் இணைத்துத் தெரிந்து கொண்டால், இந்த இயக்கத்தின் உள்ளத்து அழுகுரலாய் ஒலிக்கும் குரலை நாம் அறிந்து கொள்ளலாம். தாங்கள் பிறந்த மண்ணான ஆப்பிரிக்காவில் மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருந்த கருப்பின மனிதர்களை, அமெரிக்காவுக்கு அடிமை வேலை செய்வதற்காக இழுத்துக்கொண்டு வந்த நிகழ்வு பெரும் துயர நிகழ்வு. வாசிக்கும் – அந்த நிகழ்வைக் கேட்கும் – யூ டியூபில் பார்க்கும் நமக்கே கண்ணீரை வரவழைக்கும் நிகழ்வு. எவ்வளவு பெரிய சுயநலத்தோடு அமெரிக்க வெள்ளையர்கள் கருப்பின மக்களை அணுகினார்கள் – நடத்தினார்கள் என்பதனை,ஆப்பிரிக்கர்கள் அமெரிக்காவிற்கு அடிமைகளாகக் கொண்டு வரப்பட்ட வரலாற்றை ஒரு யூடியூப் காணொலி விவரிக்கிறது. https://www.history.com/topics/black-history/black-history-milestones Slavery comes to North America 1619 என்னும் இணைய முகவரியில் இருக்கும் அந்தக் காணொலி, ஆப்பிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்குக் கொண்டுவரும் வழியில், 2 மில்லியனுக்கும் மேற்பட்ட ஆப்பிரிக்கர்கள் கப்பலிலேயே இறந்திருக்கிறார்கள்; கப்பலின் கீழ்த்தளத்தில் நூற்றுக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் ஒன்றாக அடைக்கப்பட்டதையும், வயிற்றுப் போக்கு, அம்மை போன்ற பல்வேறு நோய்களுக்கு உள்ளாகிக் கருப்பின மக்கள் இறந்ததையும், அந்தக் கப்பலில் கொண்டு வரப்படும் நிலையில் பெண்கள் பாலியில் அடிப்படையில் கொடுமைப்படுத்தப்பட்டதையும், ஆண்களுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகளையும் அடக்குமுறைகளையும் அந்தக் காணொலி விரிவாக எடுத்துவைக்கிறது.

1525இல் இருந்து ஆப்பிரிக்கர்கள் அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டார்கள் என்று சொல்லப்பட்டாலும், அதிகாரப்பூர்வமாக1619 ஆகஸ்ட் மாதம் அமெரிக்காவின் வெர்ஜினியா என்னும் இடத்திற்குக் கொண்டு வரப்பட்ட 20 ஆப்பிரிக்கர்களோடு,அமெரிக்க ஆப்பிரிக்கர்களின் வரலாறு தொடங்குகிறது. 1492ஆம் ஆண்டுதான் கொலம்பஸ் அமெரிக்கத் தீவுகளைக் கண்டுபிடித்தார். அப்போது அங்கு வாழ்ந்து கொண்டு இருந்தவர்கள், அந்த மண்ணின் சொந்தக்காரர்களாக இருந்த செவ்விந்தியர்கள். அங்கு இருந்த செவ்விந்தியர்களை, விலங்குகளை வேட்டையாடுவது போல வெள்ளையர்கள் கொன்று குவித்த கதை இன்னொரு சோகக்கதை. 1619ஆம் ஆண்டு ஆரம்பித்த ஆப்பிரிக்கர்களின் அடிமை வரலாறு, 400 ஆண்டுகளைக் கடந்த நிலையில், தனது முன்னோர்கள் எப்படி எல்லாம் துன்புறுத்தப்பட்டார்கள், அடிமைப்படுத்தப்பட்டார்கள், விலங்குகளை விடக் கேவலமாகவும், சுயமரியாதை அற்றும் வாழ வலியுறுத்தப்பட்டார்கள் என்பது எல்லாம் இன்று ஆவணங்களாக இன்றைய தலைமுறைக்குக் கிடைக்கிறது.அவர்களுக்கு, தன்னுடைய முன்னோர்கள் பட்ட வேதனையையும் துன்பத்தையும் மனக்கண் முன்னால் பார்க்கப்பார்க்கக் கோபம் மேலோங்குகிறது.

17ஆம் நூற்றாண்டு மற்றும் 18ஆம் நூற்றாண்டுகளில் ஆப்பிரிக்கர்கள், அவர்கள் நாடுகளில் ஆடு, மாடுகளைப் போலப் பிடித்து, கடத்தப்பட்டு, அமெரிக்காவுக்குக் கொண்டு

வரப்படுகிறார்கள். கற்பனை செய்து பாருங்கள். நமது கிராமத்தில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். திடீரெனச் சிலரால் நாம் கடத்தப்படுகிறோம். எங்கு நாம் கொண்டு செல்லப்படுகிறோம் என்று தெரியாத நிலையில், கப்பலில் மாடுகளைப் போல அடைக்கப்படுகிறோம். கப்பல் புறப்படுகிறது. நமக்குத் தெரியாத மொழியைப் பேசும் சில வெள்ளை மனிதர்களால் நாம் சவுக்குகளால் அடிக்கப்படுகிறோம். நமது கண்ணுக்கு முன்னால் நமது பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுகிறார்கள். வலுக்கட்டாயமாக நம்மை ஆடச்சொல்கிறார்கள், உடற்பயிற்சி செய்யச்சொல்கிறார்கள். எதிர்ப்பு காட்டுகிறவர்கள் கருணையின்றித் தண்டிக்கப்படுகிறார்கள்; கொல்லப்பட்டு கடலுக்குள் தூக்கி எறியப்படுகிறார்கள் என்பதை நினைக்கவே கொடுமையாக இருக்கிறது இல்லையா? இப்படித்தான் ஆப்பிரிக்கர்களை அமெரிக்காவுக்கு வரவைத்திருக்கிறார்கள். வந்த கருப்பின மக்கள் அமெரிக்காவில் சந்தைகளில் ஆடு,மாடுகள் போல விற்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கெனத் தனியாகச் சந்தைகள் ஏற்படுத்தப்படுகின்றன. 18 ஆம் நூற்றாண்டில் மட்டும் 6 மில்லியனிலிருந்து 7 மில்லியன் வரையிலான ஆப்பிரிக்கர்கள் கடத்தப்பட்டு அமெரிக்கச் சந்தைகளில் விற்கப்பட்டனர். நிரந்தர வேலைக்காரர்களாக ஆக்கப்பட்டனர். கடுமையான உழைப்பாளிகளாக இருந்த ஆப்பிரிக்கர்கள் அடிமைகளாகக் கிடைப்பதை மிகப்பெரிய வாய்ப்பாக அமெரிக்க வெள்ளையர்கள் நினைத்துள்ளனர்.

**கருப்பின மனிதர்களும் அமெரிக்காவும்:**

"இலக்கியம் காலத்தைக்காட்டும் கண்ணாடி என்பர். அப்படி அமெரிக்காவில் கருப்பின மனிதர்களின் நிலையை அறிந்து கொள்ள ஒரு நூல் உதவுகிறது. "கருப்பு அடிமைகளின் கதை" என்று வான்முகிலன் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட - ஹேரியர்ட் பீச்சர் ஸ்டவ் (Harriet Beecher Stowe) அவர்கள் எழுதிய 'UNCLE TOM'S CABIN' என்னும் நூல் அது. வெளியான முதல் வாரத்தில் பத்தாயிரம் பிரதிகளும், முதல் வருடத்தில் மூன்று லட்சம் பிரதிகளும் ஒரு புத்தகம் விற்பனையா? உண்மைதான். அங்கிள் டாம்ஸ் கேபின் அப்படி விற்பனையாகி இருக்கிறது.அதை எழுதியவர் ஹேரியட் பீச்சர் ஸ்டவ் என்னும் அமெரிக்கப் பெண் எழுத்தாளர். 1811இல் பிறந்து ஆன்மீகச் சூழலில் வளர்ந்தவர். அடிமைத்தனத்திற்கு ஆதரவாகத் தப்பிக்கும் அடிமைகளுக்கான சட்டம் இயற்றப்பட்டதில் தாக்கம் பெற்று, அடிமைத்தனத்திற்கு எதிரான இந்த நாவலை எழுதினார். இந்த உள்நாட்டு யுத்தத்தை உருவாக்கிய புத்தகத்தை எழுதிய சிறுபெண்என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிடும் அளவுக்குக் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய புத்தகம் இது. நமது முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு தனது வாழ்க்கை வரலாற்றில் இந்த நாவல் பற்றி சிறப்பாகச் சித்தரித்துள்ளார்[2]. மனதளவில் கருப்பின மக்களுக்கு எதிரான ஒரு வன்மத்தை, வன்முறையை எப்படி வெள்ளை நிறத்து அமெரிக்கர்கள் வைத்திருந்தார்கள், எப்படி அடிமைகளாகக் கொடுமையாக நடத்தினார்கள், அதற்கு எப்படிச் சட்டங்களை இயற்றினார்கள், அந்தச் சட்டங்களின் துணையோடு கருப்பின மக்களை எப்படி விலங்குகளைவிடக் கீழாக நடத்தினார்கள் என்பதனை இந்த நாவல் சொல்கிறது.

அடிமை முறை கருப்பின மனிதர்களை என்னவெல்லாம் செய்தது? குடும்பத்தைக் குலைத்த கொடுமை, அடிபணியா அடிமைகளை கொலை செய்யும் கொடுமை, வெள்ளையருக்கு எதிரான கருப்பர்களின் சாட்சி கூட எடுபடாத கொடுமை, கசையடி கொடுக்கும் நிறுவனம் நிறுவியிருந்த கொடுமை, அடிமைகளிடம் அனுதாபம் கொண்டிருப்போருக்கும் கடுந்தண்டனை கொடுக்கும் கொடுமை, அடிமை முறை அநியாயம் என்று கருதுபவர்களும் கையறு நிலையில் இருந்த கொடுமை, தனது குழந்தையை இழந்ததற்காகத் தற்கொலை செய்து கொள்ளும் கொடுமை, தப்பித்து ஓடுவோரை விடாப்பிடியாக விரட்டிப்பிடிக்கும் கொடுமை, தங்களுக்குள்ள உணர்ச்சிகள் அடிமைகளுக்கு இருக்கக்கூடாதென்று கருதும், அடிமைகளைத் தொடுவதுகூடக் கெடுதல் என்று நல்லவர்கள்கூட நினைக்கும் கொடுமை, சிலர் அதிகாரம் பண்ணவும், சிலர் சேவை செய்யவும் பிறந்தவர்கள் என்று எண்ணும் கொடுமை, பச்சிளம் குழந்தையைச் சாகடித்த கொடுமை, சட்டமும், அரசாங்கமும் அடிமைத்தனத்தை அரவணைத்துப் பாதுகாக்கும் அரணாக இருந்த கொடுமை, உடல் உழைப்பைக் கொடுப்பவன் தாழ்ந்தவன்என்கிற

மனப்பாங்கு உற்சாகமாக உலவிய கொடுமை, தனது குழந்தையைக் கொடுமைகளிலிருந்து விடுவிக்க அதனைக் கொன்ற கொடுமை, கனிவாக இருந்தவர்களும் துணிவாக இல்லாத கொடுமை, அநீதியை இயல்பானது என்று நியாயப்படுத்திய கொடுமை,இதற்கு சட்டப்பாதுகாப்பு கொடுத்த கொடுமை[3] என்று கருப்பின மனிதர்களுக்கு எதிரான கொடுமைகள் என்னென்ன நடந்தன என்பதனை நமது கண்களுக்கு முன்னால் நிறுத்தும் நூலாக இந்த 'அங்கிள் டாம்ஸ் கேபின்' என்னும் புத்தகம் இருக்கிறது.

இந்தப் புத்தகம் வெளியான சில வருடங்களுக்குப் பிறகு, உள்நாட்டுப்போர் அமெரிக்காவில் ஏற்பட்டு, உள்நாட்டுப்போரின் விளைவாக உடன்பாடு ஏற்பட்டு, டிசம்பர் 18,1865 ஆம் ஆண்டு அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டதாக அமெரிக்காவில் அறிவிக்கப்படுகின்றது. ஏறத்தாழ 155 ஆண்டுகளுக்கு முன்னால் அடிமைத்தனம் ஒழிந்ததாக அறிவிக்கப்பட்டாலும், கருப்பு இனத்தவர்கள் தங்கள் அடிமைகள் என்கிற எண்ணம் இன்னும் அமெரிக்க வெள்ளையர்களுக்கு இருப்பதே கருப்பு இனத்தவர்கள் மேல் ஏவப்படும் வன்முறைகளுக்கு அடித்தளமாகும்.அது மட்டுமல்ல, கருப்பு இனத்தவர்கள் விடுதலை அடைந்ததாகச்சொல்லப்பட்டாலும், பொருளாதார விடுதலை இன்னும் கிடைக்கவில்லை. கருப்பு இனத்தவர்களை ஒரு குற்றப்பரம்பரையினர் என்னும் நோக்கிலேயே அமெரிக்க வெள்ளையர்கள் பார்ப்பதும், அணுகுவதும் இன்றைய கருப்பு இனத்தவர்களின் துன்பத்திற்குக் காரணமாகும்.

**திராவிடர்களும் ஆரியர்களும்:**

திராவிடர்கள் அனைவரும் தமது நிலையில் தாழ்ந்ததற்கு, ஜாதி அமைப்பே காரணம். பல்வேறு ஆய்வுகள், அறிஞர்களின் கூற்றுகள் நமக்கு ஜாதி அமைப்பு முறையின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும், அது இந்திய மண்ணில் நின்று நிலைபெற்று இருப்பதற்கான காரணத்தையும் காட்டுகின்றன. அமெரிக்காவின் பூர்வகுடி மக்களான செவ்விந்தியர்களை வெள்ளையர்கள் கொன்றுகுவித்து அழித்தார்கள். ஆப்பிரிக்காவிலிருந்து கருப்பின மனிதர்களை கடத்திக்கொண்டு வந்து, இழுத்துக்கொண்டு வந்து அடிமைகளாக ஆக்கினார்கள். ஆனால், வெள்ளை நிறத்தவரான ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்தபோது, இந்தியாவில் இருந்த பூர்வகுடி மக்களே திராவிடர்கள். ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன்னால் கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்குள் வந்தவர்கள் ஆரியர்கள். அண்ணல் அம்பேத்கர் இந்தியா முழுவதும் பரவியிருந்த நாகர்களே திராவிடர்கள். ஆரியர்கள் வருகையால் அவர்கள் இந்தியாவின் தென்பகுதிக்கு நகர்ந்தார்கள் என்று குறிப்பிடுகின்றார். திராவிடர் என்கின்ற சொல்லுக்கு அம்பேத்கர் சொல்கின்ற விளக்கம் என்னவென்றால் சிந்து நதி தீரத்தில் இருந்த 'தசியுக்கள்' அல்லது 'கருப்பர்கள்' என்கின்ற பூர்வகுடி மக்கள்; அவர்கள் பேசிய மொழி திராமிள; அந்தத் திராமிள என்கின்ற சொல்லில் இருந்துதான் தமிழ் வந்தது; திராவிடம் என்ற சொல்லும் வந்தது; அப்போது ஆரியர்கள் உள்ளே வரவர, திராமிள அல்லது தமிழ் பேசிக்கொண்டிருந்த மக்கள் தெற்கே தள்ளப்பட்டார்கள்"[4] என்று கூறுகின்றார். கருப்பாக இருந்த திராவிடர்கள்தான் தமிழர்கள். அவர்கள் இந்தியா முழுவதும் இருந்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

ஜெர்மானியர்கள், தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். நம் நாட்டுப் பார்ப்பனர்களும், தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இந்து மத ஆதாரங்களும் ஆரியமதம்,ஆரியக்கடவுள்கள்,ஆரியமன்னர்களின் கலைகள் என்பதாகத்தான் இருந்து வருகின்றன. புராண ஆராய்ச்சிக்காரர்களும் பாரதம், இராமாயணம் மற்றப் புராதனக்கதைகள் ஆகியவற்றில் வரும் சுரர் - அசுரர் என்கின்ற பெயர்களையும், ராமன் - அனுமான் என்கின்ற பெயர்களையும் ஆரியர் - திராவிடர் என்கின்ற பிரிவையே பிரதானமாகக் கொண்டவை என்பதாகவும் தீர்மானித்து புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள்.

மேல் நாட்டுச் சரித்திரக்காரர்களும், சிறப்பாக அரசாங்கத்தார்களும் மேல் கண்ட ஆரியர் - திராவிடர் பிரிவுகளை ஒப்புக்கொண்டு அப்படியே ஆதாரங்களை ஏற்படுத்தி, பள்ளிப்பாடமாகவும் வைத்து வந்திருக்கிறார்கள். அரசியல்காரர்களில் தீவிரக் கொள்கை கொண்ட தேசியவாதிகள், சமதர்மக்காரர்கள், பொதுவுடைமைக்காரர்கள் என்று சொல்லப்படுகின்ற தோழர் ஜவஹர்லால் நேரு

போன்றவர்களும், தங்களது ஆராய்ச்சிகளில் ஆரியர் - திராவிடர் என்கின்ற பிரிவுகளை ஒப்புக்கொண்டும், சரித்திரங்களில் இருந்து வரும் ஆரியர் - திராவிடர் பிரிவுகளை ஒப்புக்கொண்டும் இருக்கிறார்கள்"[5] என்று குறிப்பிடுகின்ற தந்தை பெரியாரின் உரை பல்வேறு நிலைகளில் ஆரியர் திராவிடர் என்னும் பிரிவுகள் இருந்த வரலாற்றைக் குறிப்பிடுகிறது.

வெளி நாட்டிலிருந்து இந்தியாவிற்குள் வந்தவர்கள் ஆரியர்கள்."தமிழ்(திராவிட) இனத்தையடுத்து, இந்தியரிடையே பரவலாகக் கலந்து விட்டவர்கள் ஆரியர் ஆவர். காஸ்பியன் கடலுக்கு வடக்கிலமைந்த மத்திய ஆசியாவிலிருந்து அய்ரோப்பா, பாரசீகம், இந்தியா ஆகிய பகுதிகளில் அவர்கள் குடியேறினர் எனப் பொதுவாக நிறுவியுள்ளனர். சுமார் கி.மு.2000இல் இந்தியா வந்தனர். அவர்கள் இங்கு நுழைந்தபொழுது, சிந்துவெளி நாகரிகம் வளர்ந்தோங்கியிருந்தது. நேரான அகன்ற தெருக்கள், மூடப்பட்ட சாக்கடைகள், அறைகள் பல கொண்ட மாடி வீடுகள், பொது மண்டபங்கள், பொதுக்குளியல் இடங்கள் முதலிய சிறப்புகள் இருந்தன. நாகரிகமற்ற காட்டு வாழ்க்கையினரான ஆரியர்கள், நகர நாகரிகம் படைத்துச் சுகமாக வாழ்ந்த சிந்துவெளி திராவிடரை வென்றனர். குதிரை, இரும்பு, வில் ஆகியவற்றைத் திறம்படப் பயன்படுத்த ஆரியர் கற்றிருந்தமை, சிந்து வெளி மக்களை அவர்கள் வென்றமைக்கு முக்கியக் காரணம் எனலாம்"[6] என்று கு.வெ.கி.ஆசான் குறிப்பிடுகின்றார். நாகரிகமான திராவிடரை நாகரிகமற்ற ஆரியர்கள் போரில் வென்றார்கள் என்று கு.வெ.கி. ஆசான் குறிப்பிடுகின்றார்.

மிக நாகரிமான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் திராவிடர்கள் என்பதனை அன்றைய சிந்துவெளி நாகரிக ஆய்வுகளும் இன்றைய கீழடி ஆய்வுகளும் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.அவர்கள் எப்படிக் கீழ் ஜாதிகளாக மாற்றப்பட்டு, கல்வி அற்றவர்களாக, பொருளாதாரம் அற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள் என்பதனை வெளிப்படுத்திய இயக்கம் திராவிட இயக்கம். மேற்கண்ட அறிஞர்களின் கூற்றுகள் மட்டும் ஆரியர்கள் வந்தேறிகளே என்பதனைச் சொல்லவில்லை. இன்று வெளிவந்து கொண்டிருக்கும் மரபியல், மொழியியல், தொல்லியல் ஆய்வுகள் அனைத்தும் ஆரியர்கள் வந்தேறிகளே என்பதை எந்தவிதமான அய்யமின்றி உறுதிப்படுத்துகின்றன. இதனைக் கட்டுரையின் பின்பகுதியில் காண்போம். திராவிட இயக்கத்தின் அடித்தளம் நாம் (திராவிடர்கள்) வேறு; ஆரியர்கள் வேறு, நமது பண்பாடு வேறு; ஆரியர்களின் பண்பாடு வேறு, ஆரியர்கள் வந்தேறிகள் என்பதாகும்; ஆரியத்தின் தந்திரம்: ஆரியர் அல்லாத மக்கள் ஜாதிகளாக சிதறுண்டு கிடக்கின்றார்கள். இந்த ஜாதி அமைப்பு எதன் அடிப்படையில் அமைகின்றது? வர்ண அடிப்படையில். வர்ண அமைப்பு முறையை முதன் முதலில் ஏற்படுத்தியவர்கள் ஆரியர்கள் என்பது வெளிப்படை. வர்ணங்களை உண்டாக்கியவர்கள் யார்? என்கிற கேள்விக்கு ஆரிய இலக்கியங்கள் கடவுள் என்று பதில் அளிக்கின்றன.

சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்; குணகர்ம விபாகச/தஸ்ய கர்த்தாராம் அபி மாம் வித்தி அகர்த்தாரம் அவ்வயம்" (கீதை - அத்யா 4 - சுலோகம் 13)

குணங்களுக்குத் தக்கபடி கருமங்களை வகுத்து, நான்குவர்ண முறைபாடு என்னால் படைக்கப்பட்டது. நானே அதற்குத் தலைவனாக இருந்தாலும் அந்த நால்வர்ணப் பாகுபாட்டை மாற்றி வைக்க என்னாலும் முடியாது. இதன்படி ஜாதி என்பது மனிதனால் உண்டாக்கப்பட்டது அல்ல. அது கடவுளால் உண்டாக்கப்பட்டது என்று இந்த சுலோகம் விதிமுறை வகுக்கிறது. [7]

தங்களுக்குத் தாங்களே கடவுள் எனப்படும் பிரம்மாவின் நெற்றியிலிருந்து பிறந்ததாக எழுதி வைத்துக்கொண்ட ஆரியர்கள்,அதனைமற்றவர்களை நம்ப வைத்ததில்தான் ஆரியர்களின் நரித்தனமான வெற்றி இருக்கிறது. எப்படி நம்ப வைத்தார்கள்? மனு ஸ்மிருதியின் மூலமாக நால்வகை வர்ணங்களை நிலை நிறுத்திக்கொண்ட ஆரியர்கள், அதனை மற்றவர்கள் நம்ப வேண்டும் என்பதற்காக, அந்த வர்ணாசிரம அமைப்பு, கடவுளால் உண்டாக்கப்பட்டது என்றும், மாற்றமுடியாதது என்றும் ஆக்கிக்கொண்டார்கள் என்பதனைத் திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி குறிப்பிடுகின்றார்.வர்ணங்கள் நான்குதான், வர்ணத்திற்கு வெளியே இருந்தவர்கள் அவர்ணர்கள், தீண்டத்தகாதோர். வர்ணங்கள் இத்தனை ஜாதிகளாக மாறியது எப்போது? அண்ணல் அம்பேத்கர் அழகாக விளக்குகிறார். "உபநயனம் நடத்தும் உரிமையைக் குருவிடமிருந்து தந்தைக்கு மாற்றிக்கொடுத்ததே

பார்ப்பனீயம் செய்த முக்கிய மாறுதலாகும். இதன் விளைவு உபநயனம் நடத்தும் உரிமையைப் பெற்ற தந்தை, தன் மகனுக்கு தன் வர்ணத்தையே தந்து விடுகிறார். இவ்வாறு வர்ணப் பரம்பரை உரிமையாக்கப்பட்டது. இவ்வாறாக வர்ணத்தை நிர்ணயிக்கும் குருவின் அதிகாரத்தைத் தந்தைக்கு மாற்றியதன் மூலம் இறுதியாகப் பார்ப்பனீயம் வர்ணத்தை ஜாதியாக மாற்றியது. வர்ணத்தை ஜாதியாக மாற்றியதன் மூலம் பார்ப்பனீயம் என்ன என்ன பயன்களைப் பெற்றது என்பதைப் புரிந்து கொள்வதில் கடினமில்லை.பண்டைக்காலத்தில் பார்ப்பனர் பெற்றிருந்த உயரிய தகுதியை ஒவ்வொரு பார்ப்பனனும் - அவன் தகுதி, திறமை பற்றி எந்தக் கேள்வியும் இன்றிப் பெறவேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இதனையே வேறு வார்த்தையில் சொல்வதானால் ஒவ்வொரு பார்ப்பனனையும் அவன் எவ்வளவு தரங்கெட்டவனாக இருந்தாலும், எதற்கும் பயனற்றவனாக இருந்தாலும், அவனைப் பிறப்பின் காரணமாக உயர்ந்த அந்தஸ்தில் நிறுத்துவதே ஆகும். விதி விலக்கின்றிப் பார்ப்பனர் சமூகம் முழுமையும் உயர்நிலைப்படுத்தும் ஒரு முயற்சியாகும். பார்ப்பனீயத்தின் இந்த நோக்கங்களை மனுவின் கட்டளைகளில் இருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். வர்ணத்தை பரம்பரை உரிமையாக்கியதன் மூலம் ஒரு முட்டாள் பார்ப்பனனைக்கூட ஒரு படித்த பார்ப்பனனின் அந்தஸ்திற்கு உயர்த்திவிடலாம் என்பதை மனு அறிந்திருந்தார். படித்த பார்ப்பனனைப் போல, முட்டாள் பார்ப்பான் மதிக்கப்படமாட்டான் என மனு அஞ்சினார். ஆகவேதான் பார்ப்பன சமூகம் முழுமையும் மேன்மைப் படுத்தும் முயற்சியில் இறங்கினார்." [8]எப்படிப்பட்ட சூழ்ச்சி. இது இன்றும் வரை தொடர்கிறது. தங்களுக்குத் தாங்களே இட ஒதுக்கீட்டை அமைத்துக் கொண்டவர்கள், செல்வம், உயர்வு அனைத்தும் தங்களுக்கு என்று எழுதி வைத்துக்கொண்டவர்கள் ஆரியர்கள். தங்களை உயர்த்திக்கொண்ட ஆரியர்கள் மற்றவர்களைச் சத்திரியர்கள், வைசியர்கள்,சூத்திரர்கள் எனப் பிரித்தனர். பிறப்பின் அடிப்படையில் ஆரியர்கள் உயர்த்தப்பட்டனர். மற்றவர்கள் பிறப்பின் அடிப்படையில் கீழே இறக்கப்பட்டனர். சூத்திரர் எனப்பட்டவர்களை மிகக் கேவலமாக எழுதி வைத்தனர். அதற்கு கடவுளைத் துணைக்கு அழைத்துக்கொண்டனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழ்ந்த திராவிட மக்கள் ஆரியத்தின் சூழ்ச்சியால் ஜாதி வலைகளுக்குள் சிக்கினர். இன்றுவரை வெளியே வரமுடியாமல், உழன்று கொண்டிருக்கின்றனர்.

"ஆரியர் வருகைக்கு முன்னர் தமிழ்நாட்டில் ஜாதிமுறை கிடையாது- என்பதில் இருவேறு கருத்துகள் கிடையாது.வர்ணாஸ்ரம தர்மப்படி வட இந்தியாவில் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்என்று நான்கு வர்ணங்களாக மக்கள் பிரிக்கப்பட்டிருந்தனர். இதுதான் வர்ணாஸ்ரம தர்மம் அல்லது சதுர் வர்ணம்என்று குறிப்பிடப்படுவதாகும்! சமுதாய வட்டத்திற்கு வெளியே தீண்டத்தகாதோர் வைக்கப்பட்டிருந்தனர்.

பிராமணர்கள் பிரம்மாவின் நெற்றியிலிருந்தும், சத்திரியர்கள் புஜங்களிலிருந்தும், வைசியர்கள் தொடையிலிருந்தும், சூத்திரர்கள் பாதங்களிலிருந்தும் பிறந்ததாகக் கூறுகிறது மனு ஸ்மிருதி.

**சூத்திரர்கள் என்போர் யார்?**

"சண்டையில் வென்று சிறையாகப் பிடித்து கொணரப்பட்டவன், அன்புடன் ஊழியஞ்செய்பவன், தன் வேசி மகன், விலைக்குக் கொள்ளப்பட்டவன், ஒருவனாற் கொடுக்கப் பட்டவன், குலவழியே தொன்று தொட்டு ஊழியஞ்செய்பவன், குற்றத்திற்காக வேலை செய்பவன் எனச்சூத்திரர் எழுவகைப்படுவர்" எனவும், பார்ப்பனன் அய்யம் இன்றி மேற்கூறிய எழுவகைச் சூத்திரரிடத்திலிருந்தும் பொருளை வலிந்து எடுத்துக்கொள்ளலாம்.தம் தலைவன் எடுத்துக்கொள்ளுதற்குரிய பொருளையுடைய அந்தச்சூத்திரர் தம் பொருளுக்குச் சிறிதும் உரிமையுடையவர் அல்லர்" என்றும் மனு கூறுவதாக மறைமலையடிகள் தெரிவிக்கிறார்[9] இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் சூத்திரர்கள் பொருளற்றவர்களாக ஆக்கப்பட்டனர். ஆக்கியவர்கள் மன்னர்கள். அதற்குக் காரணம் மனு நீதி. இன்றைய சூழலில், மனு நீதியை ஆதரித்துப் பதிவிடும் பிற்படுத்தப்பட்டவர்களைப் பார்க்கின்றபோது நமக்கு வேதனைதான் ஏற்படுகிறது.

இன்றைய உழைக்கும் மக்களில் பெரும்பான்மையினர், ஜாதி-வருண அடிப்படையில் சூத்திரர் எனும் வர்ணத்திற்குள்தான் வருகின்றனர்.

அண்ணல் அம்பேத்கர், வருணத்தை ஜாதியாக மாற்றிய பின்பு, ஆரியர்கள் சூத்திரர்கள் மீதும் சூத்திரப் பெண்கள் மீதும் கொட்டிய வெறுப்புகளைப் பட்டியலிடுகின்றார். "பார்ப்பனீயம் காட்டுமிராண்டித்தனமான அநாகரித்தோடு, வர்ணங்களுக்கு இடையிலான கலப்பு மனத்தையும், கலந்துண்ணலையும் தடை செய்யும் பணியைச்செய்தது. சூத்திரப்பெண் சம்பந்தமாக மனு காட்டும் வெறுப்பைக் கவனியுங்கள். சூத்திரர்கள் உணவு குறித்து மனு கூறியிருப்பதையும் கவனியுங்கள். அந்த உணவு விந்து அல்லது சிறுநீர் போல அசுத்தமானது என மனு கூறுகிறார். இந்த இரண்டு விதிகளும்தான் ஜாதி அமைப்பைத் தோற்றுவித்தது. கலப்பு மணத்தடை, கலந்துண்ணல் மீதான தடை ஆகிய இரு தூண்களின் மீதுதான் ஜாதியம் நிற்கிறது."[10]அண்ணல் அம்பேத்கர் இந்த நூலில் மிக விரிவாக விவரிக்கும் பெண்களின் திருமணம் பற்றிய மனுவின் கட்டளைகள், சதியை நியாயப்படுத்தும் கருத்துகள்,பால்ய மணம், கட்டாயப்படுத்தப்பட்ட விதவை நிலைபோன்றவை ஜாதியைக் காப்பாற்றும் நோக்கம் கொண்டவை என்பதனை வாசிக்கும் எவருக்கும், அமெரிக்க வெள்ளையர்கள் மீது கருப்பு இனத்தவர்கள் காட்டுகின்ற கோபம் போன்ற ஆத்திரமும், கோபமும் வரும்; வரவேண்டும்.அப்படி ஓர் உண்மையான கோபம் திராவிட இயக்கத்தின் தலைவர்களுக்கு - தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், ஆசிரியர் கி.வீரமணி போன்றவர்களுக்கு - இருந்தது; இருக்கிறது.

**இந்திய ஜாதியமும் கருப்பர்களின் மீதான நிறவெறியும் :**

ஜாதியம் என்றால் என்ன என்பதனைப் பெரியார் பேருரையாளர் கு.வெ.கி.ஆசான் இப்படி வரையறுக்கிறார். "ஜாதியம் என்பது என்ன? இந்து மதக் குருக்களும் தலைவர்களும் போற்றும் வேதங்கள்(ஸ்ருதி), சாத்திரம்,இதிகாசம், புராணம், ஸ்மிருதிஆகியவற்றின்படி அந்த மதத்தைச் சார்ந்தவர்களைப் பிறப்பின் காரணமாகப் பிரித்தும், உயர்வு தாழ்வைக் கற்பித்தும், மேல்-கீழ்படி நிலைகளை அமைத்தும், இயல்பான மனித உறவை முழு அளவில் மறுத்தும், இவற்றைச் சமுதாய நடைமுறையில் முதலில் வருண தருமமாகவும், பின்பு குல தருமமாகவும் பின்பற்றச் செய்து, வெவ்வேறு அளவில் ஒதுக்கியும் ஒதுங்கியும் வாழ்வது ஜாதியம் ஆகிறது. அதன் கூறுகள்: பாராமை, நெருங்காமை, தீண்டாமை, கோயில், குளம், சாலை முதலிய பொது உடைமைகளிலும் நலன்களிலும் சம அளவில் பொது உரிமையின்மை, சம நீதியின்மை, அனைவருக்கும் கல்வி வாய்ப்புச் சமஅளவில் இல்லாமை, விரும்பிய தொழிலை மேற்கொள்ள அனுமதியின்மை, ஜாதிகளுக்கு இடையே நெருங்கிப் பழகாமை, கலந்துறவு கொள்ளாமை,திருமணம் செய்யாமை ஆகிய கூறுகளில் பலவோ - சிலவோ,ஒன்றிரண்டோ ஜாதியத்தை அடையாளப்படுத்தியும் நிலைப்படுத்தியும் வருகின்றன."[11]

ஜாதியத்தின் கூறுகளான பாராமை, நெருங்காமை, சம நீதியின்மை, அனைவருக்கும் கல்வி வாய்ப்பு சம அளவில் இல்லாமை,விரும்பிய தொழிலை மேற்கொள்ள அனுமதியின்மை என்று அய்யா கு.வெ.கி.ஆசான் அவர்கள் சுட்டுகின்ற பல கூறுகள் கருப்பின மக்களின் மீது அமெரிக்க வெள்ளையர்கள் காட்டுகின்ற நிறவெறி அடிப்படைக் கூறுகளாகவும் இருப்பதைக் காண முடிகிறது. 'அங்கிள் டாம்ஸ் கேபின்' என்னும் புத்தகத்தில் "எலிசா என்பவரின் கணவனாகக் காட்டப்படுபவன் ஜார்ஜ் ஹேரிஸ் என்னும் இளம் மனிதன். அழகிய தோற்றமும்,இனிமையான பழக்க வழக்கங்களும் அவனிடம் இருந்தன. தொழிற்சாலையில் அனைவரின் விருப்பத்திற்குரியவனாக அவன் இருந்தான். இருந்தாலும் இந்த இளம் மனிதன் சட்டத்தின் பார்வையில் ஒரு மனிதனல்ல; ஒரு சரக்காகும்; நாட்டைச் சுற்றிப் பயணம் செய்து, புதிய இயந்திரங்களைக் கண்டுபிடித்து, பெருந்தகைகளுக்கு இணையாகத் தலை உயர்த்தி நிற்க இந்த அடிமைக்கு ஏது தகுதி? விரைவில் இதற்கு முடிவு கட்டவேண்டும். அவனைத் திரும்ப அழைத்துக்கொண்டு வெட்டவும், தோண்டவும் பணிக்க வேண்டும். அவன் எப்படிச் சாமர்த்தியசாலியாக இருக்க முடியும் என்று பார்க்க வேண்டும்.[12] ஓர் அடிமை ஒரு முதலாளியிடமிருந்து இன்னொரு முதலாளிக்கு விற்கப்படுகிறார். இரண்டாவது முதலாளி, அடிமை ஜார்ஜ் ஹேரிஸுக்கு மரியாதை அளிக்கிறார். ஒரு கருவியைக் கண்டுபிடிக்கும் அளவிற்கு ஊக்கம் தருகின்றார். கருவியைப் பற்றிக் கடைக்கு

வருபவர்களுக்கு விளக்கம் சொல்லித்தர ஜார்ஜ்ஹேரிஸிக்கு அனுமதி அளிக்கிறார். ஜார்ஜ் ஹேரிஸை விற்ற முதல் முதலாளி இதனைப் பார்க்கின்றார். ஓர் அடிமை ஒரு கருவியைக் கண்டுபிடிப்பதா? அதற்கு விளக்கம் சொல்லுவதா? அவனை மறுபடியும் விலைக்கு வாங்கி வெட்டவும் தோண்டவும் பணிக்கவேண்டும் என்று முடிவு செய்து விலைக்கு வாங்கி முழு அடிமையாக நடத்துகிறார். ஒடுக்கப்பட்ட ஒருவர் உயர் பதவிக்கு வந்து விட்டால், திராவிட இயக்கத்தின் பலன் காரணமாக மேன்மையான நிலைக்கு வந்துவிட்டால், அவருக்கு எதிராகச் செய்யப்படும் சதிகளை, மனத்தடைகளை இத்தோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கலாம். கல்வியினால், வேலை வாய்ப்பினால் மேலான நிலைக்கு வரும் ஒருவனை, மறுபடியும் அவனது பழைய நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்னும் வெறி, அமெரிக்க வெள்ளையர்கள் என்றாலும் இந்திய ஆரியர்கள் என்றாலும் மனதிற்குள் வளர்ந்துகிடக்கும் முள்செடிகளாக இருப்பதைக் காண முடியும். இந்த ஜாதிமுறையினால் சூத்திரர்களும் தீண்டத்தகாதோர் எனப்பட்டவர்களும் அனுபவித்த கொடுமைகள் அமெரிக்காவில் கருப்பின மக்கள் அடிமைகளாக அனுபவித்த கொடுமைகளுக்குச் சற்றும் குறையாதவை. சூத்திர, பஞ்சம இழிவை நீக்கவே ஜாதியத்தின் கொடுமைகளுக்கு எதிராகவும், ஜாதியின் பெயரால் மறுக்கப்படும் உரிமைகளை மீட்டு எடுக்கவும் தோன்றிய இயக்கம் திராவிட இயக்கம். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய இயக்கம் இன்றும் உயிர்ப்போடும் உணர்வோடும், எதிரிகளைக் கருத்துக்களத்தில் நேருக்கு நேர் சந்தித்து உண்மைகளை எடுத்து வைக்கும் இயக்கமாக இருக்கிறது. "நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் திராவிடர் இயக்கமாகிய நீதிக்கட்சி,தென்னிந்திய நல உரிமைச்சங்கம் - துவக்கப்பட்டதன் நோக்கம் - திராவிடர் சமுதாயம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக, கல்வி, உத்தியோகம், ஆகியவற்றைப் பெறாத தற்குறிச் சமுதாயமாகவும், சூத்திர, பஞ்சம இழிவை அது தன்னுள் ஏற்றுள்ள வர்ணாஸ்மரத்தைப் போக்கி, சம வாய்ப்பு, சம உரிமைச் சமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்பதற்காகவே ஆகும்.(13)" என்று திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிடுவதைப் போல, திராவிட இயக்கத்தின் நோக்கம் சூத்திர, பஞ்சம இழிவை போக்குவது, இழிவுக்கு காரணமாக இருக்கும் ஜாதியை ஒழிப்பது என்பது ஆகும்.

**ஜாதி உணர்வும் திராவிட இயக்கமும்:**

இந்தியாவில் 3000க்கும் மேற்பட்ட ஜாதிகள் இருக்கின்றன. எந்த ஜாதியில் பிறந்திருந்தாலும் ஜாதி என்பது இழிவு, நம் மீது திட்டமிட்டு ஆரியர்களால் எறியப்பட்ட கழிவு, ஜாதி என்பது அசிங்கம் என்ற உணர்வை ஏற்படுத்துவது - ஏற்படுத்தியது திராவிட இயக்கம்.ஜாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு கேட்பது,போராடுவது என்பதுகூட, முள்ளை முள்ளால் எடுப்பதுபோல, எந்த ஜாதி என்னும் தத்துவத்தால் இழிவு படுத்தப்பட்டோமோ, அந்த ஜாதி அடிப்படையில் நமக்கான உரிமையை மீட்டு எடுப்பதற்கான ஓர் இடைக்கால வழிமுறையே தவிர, அதுவே தீர்வல்ல என்பதைத் தமது தோழர்களுக்கு எடுத்துக்காட்டிச் சொல்லும் இயக்கம் திராவிட இயக்கம். திராவிட இயக்கம் என்று வருகின்ற போது, அரசியலுக்குப் போகாத, வாக்கு அரசியலில் தேர்தலுக்கு நிற்காத திராவிடர் கழகம் மிகத்தெளிவாக இதனைத் தெரிவித்திருக்கிறது.ஓர் உயர்ந்த ஜாதி என்று தன்னை நம்புகிறவனுக்கு இருக்கும் ஜாதிவெறி எவ்வளவு தீமையோ, அதனைப்போலவே இந்த ஏணிப்படி ஜாதி அமைப்பில் இடையில் இருக்கும் அல்லது கடைநிலையில் இருக்கும் ஒரு ஜாதிக்காரனுக்கும் இருக்கும் ஜாதிவெறியும் தீமையானதே.இரண்டுமே ஜாதி அமைப்பை இன்னும் பலப்படுத்தவே செய்யும்.ஆரியர்கள் இந்த ஜாதிப் பெருமை பேசுவதை,இடைநிலை ஜாதிகளுக்கும் மற்ற ஜாதிகளுக்கும் தூண்டிக்கொண்டே இருக்கிறார்கள். இதனை நன்றாக உணர்ந்த திராவிட இயக்கம், எல்லா ஜாதியைச் சார்ந்தவரையும், ஜாதிப்பெருமை பேசுவது என்பது அருவருப்பு என்னும் கருத்தைப் பலமாக விதைத்திருக்கிறது. அதில் வெற்றியும் பெற்றிருக்கிறது.

இட ஒதுக்கீட்டின் ஜாதி ஒழிப்புத் தத்துவம் புரியாதவர்கள், இட ஒதுக்கீட்டினால்தான் ஜாதி நிலைபெறுகிறது என்பதுபோலப் பேசுவதற்கான பதிலைத் தொடர்ச்சியாகத் திராவிட இயக்கம் கொடுத்திருக்கிறது. முள்ளை முள்ளால் எடுப்பது போல, எதன் காரணமாக (ஜாதி) உரிமை மறுக்கப்பட்டார்களோ, அதே அடிப்படையில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதுதான் இட ஒதுக்கீடு. கல்வி அடிப்படையில்,

சமூக அடிப்படையில் இட ஒதுக்கீடு என்பதைத்தான் இந்திய அரசமைப்புச் சட்டம் கொடுத்திருக்கிறது. பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு என்பது ஏமாற்று.ஏழைகளுக்கு வசதி செய்து தரவேண்டும். அவர்கள் வாழ்வில் நல்ல நிலைமை வரவேண்டும் என்கிற நோக்கில் ஆரியர்கள் பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு கேட்கவில்லை. ஜாதி அடிப்படையிலானஇட ஒதுக்கீட்டை ஒழிக்கவேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.அவர்கள் நோக்கம் - ஜாதி அடிப்படையில் சமூகம் இருக்கவேண்டும், ஒடுக்கப்பட்ட மக்கள் அடிமைத்தொழில் செய்ய வேண்டும். மத்திய அரசின் புதிய கல்விக்கொள்கை மற்றும் பல்வேறு நிலைப்பாடுகள் இதனைத் தெளிவாகச் சுட்டுவதை நம்மால் உணர முடியும்.

**திராவிட இயக்கத்தின் சாதனைகள்:**

ஆரியர் அல்லாத மக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் ஒற்றைச்சொல் 'திராவிடர்'. அப்படித் திராவிடர் அனைவரையும் ஒன்றிணைத்து, ஒற்றுமைப்படுத்தி, அனைவரும் சமூக அடிப்படையில், பொருளாதார அடிப்படையில் முன்னேறுவதற்கு அடிப்படை அமைத்த இயக்கம் திராவிட இயக்கமாகும். இழிவாக, உழைக்கும் மக்களை, சூத்திரர் என்னும் சொல்லால் குறிப்பது கொடுமை. அதனை நீக்கவேண்டும் என்று குரல் கொடுத்தது திராவிட இயக்கம். செயல்படுத்தியது திராவிட இயக்கம். "நமது ஆவணங்களில், மக்கள் தொகைக் கணக்கெடுப்புகளில் எல்லாம் இந்த நாட்டுக்குரிய பார்ப்பனர் அல்லாத மக்களைச் சூத்திரர் என்றுதானே குறிப்பிட்டு வந்தார்கள். சூத்திரர்கள் என்றால் ஏதோ 'பாரத ரத்னா' பட்டம் என்பது போல நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள்! சூத்திரர் என்பதற்கு மனுதர்ம சாஸ்திரம் பொருள் கூறியுள்ளது. அது எத்தனை பேருக்குத் தெரியும் என்பதுதான் கேள்வி. சூத்திரன் என்றால் வேசிமகன் என்று மனுதர்மம், அத்தியாயம் எட்டு, 415ஆவது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளதே! இந்த இழிவுப்பட்டத்தை ஒழித்தது யார்? எதிராகக் குரல் கொடுத்தது யார்? திராவிட இயக்கம்தானே! பார்ப்பனர் அல்லாத இளைஞர் சங்கத்தின் முதல் மாநில மாநாடு சென்னை எஸ்.அய்.ஏ.ஏ. மைதானத்தில் 1927 அக்டோபர் 22,23 நாள்களில் நடைபெற்றது. அம்மாநாட்டில் பனகல் அரசர், தந்தை பெரியார், டாக்டர் ஏ.இராமசாமி (முதலியார்) முதலியோர் கலந்து கொண்டனர். 'திராவிடன்' இதழ் ஆசிரியர் ஜே.எஸ். கண்ணப்பர் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானமாவது:-

"சென்னை அரசு தனது ஆவணங்களில் 'சூத்ரா' என்ற சொல்லைப் பயன்படுத்துவது பெரும்பான்மையாக உள்ள பார்ப்பனரல்லாத சமூகத்தினரின் சுயமரியாதை உணர்வை மிகவும் புண்படுத்துவதாக உள்ளது என இம்மாநாடு கருதுகிறது. அதனால் கடந்த கால ஆவணங்களிலிருந்து இந்தச் சொல்லை நீக்குவதுடன், அலுவலக ஆவணங்களில் இனி இச்சொல்லைப் பயன்படுத்தக்கூடாதென அனைத்து இலாகாக்களுக்கும் உடனடியாக ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டுமென அரசை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது."ஒட்டு மொத்தச் சமூகத்தின் சுயமரியாதை பற்றியது இத்தீர்மானம் என அவர் கூறினார். இத்தீர்மானம் பலத்த கைதட்டல்களுக்கிடையே நிறைவேற்றப்பட்டது. அதற்குப் பிறகுதானே 'சூத்திரன்' என்கிற இழி பட்டம் பதிவேடுகளில் ஒழிந்தது. திராவிடர் இயக்கத்தின் மிகப்பெரிய -இன இழிவை ஒழிக்கும் செயல்பாடு அல்லாவா இது?"(14)

'காந்தியாருக்கே உரிமை வாங்கிக் கொடுத்த இயக்கம் திராவிடர் இயக்கம்', 'பஸ்களில் எல்லோருடனும் கலந்து உட்காரும் உரிமை, பெண்களுக்கு முதன் முதலில் இந்தியாவிலேயே வாக்குரிமை, சாலையில் ஆதி திராவிடர் நடக்க உரிமை, கல்வியில் தலைகீழ் மாற்றமாகப் பெற்ற உரிமை என்று நாம் திராவிடத்தால் பெற்ற உரிமைகளைப் பட்டியலிட்டுக் கொடுக்கும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள், திராவிடம் என்பதற்கான ஒரு வரையறையைத் தருகிறார். பல நிலைகளில் தமிழ்நாடு இன்று இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் ஒன்றாக இருப்பதற்குக் காரணம் திராவிட இயக்கமும், திராவிட இயக்க ஆட்சிகளுமாகும்.இதனைப் பல புள்ளி விவரங்கள் உறுதியாக்குகின்றன.

**திராவிடர் இயக்கக் கொள்கைக்கு வலுவூட்டும் ஆய்வுகள்:**

திராவிடர் இயக்கம் என்பது ஆரியர்களின் மேலாண்மையை எதிர்த்துத் தோன்றியது. இன்றைய

தொல்லியல், மொழியியல், மரபணு இயல் எனப் பல கூறுகள் திராவிடர் இயக்க கொள்கைகளுக்கு வலுவூட்டுவதாக இருக்கின்றன.

சிந்து வெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்: ஆரியப் பண்பாட்டுக்கு எதிரான மிக நாகரிகமான நாகரிகத்தைக் கொண்டிருந்தது சிந்து வெளி நாகரிகம். இன்றைய மொழியியல் ஆய்வுகள், சிந்து வெளிப்பண்பாட்டின் அடித்தளம் திராவிடமே என நிறுவுகின்றன. "சிந்து வெளி நாகரிகம் குறித்த எந்த நேரடிச்செய்தியும் வேதங்களிலோ, ஏனைய வடமொழி இலக்கிய மற்றும் வரலாற்று ஆவணங்களிலோ காணப்படவில்லை. சிந்து வெளி நாகரிகம் வேத இலக்கிய நாகரிகத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. இன்னும் பலவகையிலும் திராவிடச் சாயல் கொண்டதாக இருக்கிறது"[15] என்று குறிப்பிடும் ஆர்.பாலகிருஷ்ணன், தனது நூலான "சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்" என்னும் நூலில் இலக்கியம், மொழி, ஊர்ப்பெயர்கள் அடிப்படையில் சிந்துவெளிப்பண்பாட்டின் நாகரிகம் திராவிட நாகரிகமே என நிறுவுகின்றார். அவர் தனது நூலில் "சிந்து வெளி நாகரிகம் ஒரு திராவிட நாகரிகம் என்னும் கருதுகோளின் அடிப்படையில் அணுகினால், சிந்துவெளிப் பண்பாட்டுக் காலத்து ஊர்ப்பெயர்கள் வடமேற்குப் புலத்தில் இன்றுவரை நிலைத்திருப்பது, புலம் பெயர்ந்த சிந்து வெளியினர், அவர்கள் தங்களது ஊர்ப்பெயர்களை மீள் நினைவாய்க் கொண்டுவந்து தங்களது புதிய தாயகத்தில் பயன்படுத்தியது; அவர்களின் வாய்மொழிப்பாடல் மரபில், கதை மரபில் வேரூன்றிய அப்பெயர்கள் திராவிடர்களின் தொல்லிலக்கியமான சங்க இலக்கியங்களில் ஆவணப்பதிவு செய்யப்பட்டது; அப்பெயர்களில் பல இன்றுவரை தமிழ் நாட்டில் அடையாளம் காணத்தக்க வகையில் பயன்பாட்டில் இருப்பது"[16] என்று பட்டியலிடும் ஆர்.பாலகிருஷ்ணன், இது வெறும் யூகம் அன்று என்று குறிப்பிட்டு ஆதாரங்களை அந்த நூல் முழுக்கக் கொடுத்திருக்கின்றார்.

**கீழடி ஆய்வு:**

தொல்லியல் துறை நடத்தும், மதுரை அருகில் உள்ளகீழடிஆய்வு,புதியவெளிச்சங்கள்பலவற்றைத் தருவதாக இருக்கிறது. 2600 ஆண்டுகளுக்கு முன்பே உயர்ந்த நாகரிகத்தைக் கொண்டிருந்த கீழடி ஆய்வு, அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாகரிகம் தொடங்கியிருக்கவேண்டும் என்னும் கருத்துக்கு வலுவூட்டுகிறது. "இந்த(கீழடி) ஆய்வு முடிவுகளுக்கும் சங்க இலக்கியத்திற்கும் என்ன தொடர்பு எனக் கேட்கிறார்கள். சங்கப் பாடல்கள் அந்தக் காலகட்டத்து மண்ணையும் மனிதர்களையும் பாடின. அந்தப் பாடல்களுக்கான வரலாற்றுப் பின்னணியை இங்கே கிடைத்த பொருள்கள் உணர்த்துகின்றன. சங்க காலப் பாடல்கள் காட்டும் தமிழ்ச் சமூகம் மிக உயர்ந்த நாகரிகம் கொண்டதாகத் தென்படுகிறது. அப்படி ஒரு நாகரிகம் இருந்திருந்தால்தான், அம்மாதிரியான பாடல்கள் உருவாகியிருக்க முடியும். அதற்கான ஆதாரமாகத்தான் கீழடி இருக்கிறது" என்கிறார் ஆர். பாலகிருஷ்ணன்.

மற்றொரு விடயத்தையும் பாலகிருஷ்ணன் சுட்டிக்காட்டுகிறார். சிந்து சமவெளி குறியீடுகளுக்குப் பிறகு, தமிழ் பிராமி உருவாவதற்கு முன்பாகக் கீறல்கள் பானைகளில் எழுதப்பட்டுள்ளன. சிந்து வெளிக் குறியீடுகளைப் போலவே இந்தக் கீறல்களையும் படிக்க முடியவில்லை. இம்மாதிரியான பானைக் கீறல்கள் இந்தியாவிலேயே அதிகம் கிடைத்திருப்பது தமிழ்நாட்டில்தான். கீழடியில் மட்டும் 1001 பானைக் கீறல்கள் கிடைத்திருக்கின்றன. இது எழுத்து உருவாவதைக் காட்டுகிறது. இம்மாதிரியான கீறல்கள் கங்கைச் சமவெளியில் பெரிதாகக் கிடைக்கவில்லை என்கிறார் அவர் (ஆதாரம் : https://www.bbc.com/tamil/india-49768739). கீழடி ஆய்வு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

"கீழடி அகழ்வாய்வுகளில் இருந்து இதுவரை, கவனமாக ஆய்வு செய்யத் தகுந்த மதம் தொடர்பான குறியீடுகள் எதுவும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கையுடன் இணைந்த வாழ்வு, ஜாதி அமைப்பு இன்மை, குறைந்த அதிகாரங்கள் பயன்பாடு, ஆகியவற்றைக்கொண்ட ஒரு பண்பாட்டையே கீழடி அகழ்வாய்வுகள் வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கும். கீழடி கண்டுபிடிப்புகள் நமக்கு உணர்த்த விரும்புவது என்னவென்றால் மதச்சார்பின்மை,உள் இணைக்கப்பட்ட, சம நிலைப்படுத்தப்பட்ட சமூக உறவுகள் ஆகியன, இயற்கையோடு இணைந்த

ஒரு சமுதாயத்துக்கு அந்நியமாக இருக்க முடியாது என்பதுதான்"[17] என்று புலங்கடந்த தொல்லியல் அறிவியல்களின் மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் இயக்குநர் பி.ஜெ.செரியன் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது[18]. கீழடி ஆய்வின் அய்ந்தாம் கட்ட ஆராய்ச்சி முடிவுகள் (https://www.bbc.com/tamil/india-50148597) திராவிடர்களின் பெருமையை, நாகரிகத்தைப் பறைசாற்றுவதாக இருக்கிறது.இன்னும் தொடரும் ஆய்வுகள் பல புதிய உண்மைகளைக் கூறக்கூடும். .

**மரபணுவியல் ஆய்வு:**

டோனி ஜோசப் எழுதியுள்ள ஆதி இந்தியர்கள் புத்தகம் (Early Indians: The Story of Our Ancestors and Where We Came From) பற்றி எழுத்தாளர் கோ.ஒளிவண்ணன் உண்மை இதழ்(அக்டோபர் 16-31,2020) இதழில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார். "ஆதிகால இந்தியர்கள் என்கிற இந்தப் புத்தகத்தில் இந்தியர்கள் யார்? எங்கிருந்து வந்தவர்கள்? சிந்துசமவெளி நாகரிகத்தில் வாழ்ந்தவர்கள் யார்?ஆரியர்கள் எப்போது வந்தார்கள்? ஜாதி அமைப்புகள் எப்படித் தோன்றின? என்பன போன்ற பல கேள்விகளுக்கு விடை தேட முயல்கிறார்; வெற்றியும் பெற்றுள்ளார்.ஆரியர்கள் யுரேசியாவின் ஸ்டெப்பி புல்வெளியிலிருந்து வந்தவர்கள்.அவர்கள் இந்த மண்ணிலே தோன்றியவர்கள்; இந் நாட்டிற்குக்கலாச்சாரம் பண்பாட்டை அளித்தவர்கள் என்கிற கோட்பாடு சுக்கு நூறாக உடைக்கப்பட்டுள்ளது.

தங்களை ஆரியர்கள் என்று அழைத்துக்கொண்ட ஒரு மக்கள் கூட்டம் சமஸ்கிருதம் என்ற மொழியுடனும் தனிவகைப்பட்ட கலாச்சாரத்துடனும் கி.மு.2000க்கும் கி.மு.1500க்கும் இடைப்பட்ட காலத்தில்(அதாவது சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பு)இந்தியாவிற்குள் குடியேறினார்களா என்பதுதான் அந்தக் கேள்வி. அந்தக் காலகட்டம்தான் சிந்து சமவெளி நாகரிகம் முடிவுக்கு வந்த காலம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆம், அவர்கள் குடியேறிகள்தான்" என்கிற ஆணித்தரமான, அய்யத்துக்கிடமற்ற பதிலை உலகம் முழுவதிலுமுள்ள விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய ஆதாரங்கள் அலை அலையாக வந்து கொண்டிருக்கின்றன." (18)

ஆதி இந்தியர்கள் போன்ற மரபியல் ஆய்வின் வெளிப்படையில் வெளிவரும் புத்தகங்கள்,ஆரியர்கள் வந்தேறிகளே என்பதனை நிருபிக்கின்றன. உலகம் முழுவதும் உள்ள மக்கள், எல்லாம் ஆப்பிரிக்கக் கண்டத்தில் தோன்றிப் பரவிய மனிதர்களே என்பதனையும் இந்த ஆய்வுகள் சொல்கின்றன. ஒரு வகையில் எல்லோரும் புலம் பெயர்ந்தவர்களே. "ஒரு தாய் மக்கள் நாமென்போம், ஒன்றே எங்கள் குலம் என்போம்" என்னும் திரைப்படப் பாடல் சுட்டுவது போல, சில தாய் மக்களே உலகம் முழுவதும் இருக்கும் மனிதர்களின் மூதாதையர்கள் என்பதனை மரபியல் ஆய்வுகள் சொல்கின்றன.

**மாறுவார்களா ஆரியர்கள்?:**

அமெரிக்க வெள்ளையர்களுக்கு எதிராக,நிறவெறிக்கு எதிராகக்கருப்பின மக்கள் ஒன்று சேர்ந்து குரல் கொடுப்பதையும், அவர்கள் ஒற்றுமையாகக் களத்தில் நிற்பதையும் நம்மால் காண முடிகின்றது.

அமெரிக்க மக்கள் தொகையில் 13 சதவிகிதம் உள்ள கருப்பர்கள், வெள்ளையர்களின் இனவெறிக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கின்றார்கள்.களத்தில் அவர்கள் நிற்பதால் சில சட்டங்களும் இயற்றப்படுகின்றன.புதிய அமெரிக்க அதிபராக ஜோ பைடன் தேர்ந்தெடுக்கப்பட்டதில், அமெரிக்க அதிபர் டிரம்ப் தோற்கடிக்கப்பட்டதில் 'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கத்தின் பங்களிப்பு இருக்கிறது. ஆனால், இந்தியாவில் ஆரியர்கள் மிகக்குறைந்த சதவிகிதமே, மூன்று சதவிகிதத்திற்கும் கீழ்தான் ஆரியர்கள் உள்ளனர்.மற்ற 97 சதவிகித மக்கள், ஆரியர்களால் ஏமாற்றப்படுகின்றனர். அதிகார மய்யங்கள் அனைத்திலும் 97சதவிகத மக்களை ஒதுக்கிவிட்டு,இந்த 3 சதவிகித ஆரியர்களே கோலாச்சுகின்றனர். இந்தியாவில் இருக்கும் அரசு அலுவலங்கள்,நீதிமன்றங்கள்,அரசுச்செயலகங்கள் என அனைத்திலும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆரியர்கள் அற்புதமான, வெளியில் தெரியாத இணைப்புச் சங்கிலிகளைத் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டு, மற்றவர்களை வரவிடாமல் பார்த்துக்கொள்கிறார்கள். திராவிட இயக்கத்தின் தொடர் போராட்டங்கள், முயற்சிகளின் விளைவாகத் தமிழ்நாட்டில் 69 சதவிகித இட ஒதுக்கீடு உள்ளது. 1951இல் முதன்முதலில் அரசியல் சட்டம் திருத்தம் செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் தந்தை பெரியார். 69 சதவிகித

இட ஒதுக்கீடு, தமிழகத்தில் ஏற்படக் காரணமாக இருந்தவர் திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி.அவர் எழுதிக் கொடுத்த சட்டவரைவை அன்றைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா நிறைவேற்றினார். இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு,69 சதவிகித இட ஒதுக்கீடு, 9 ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தியா முழுமையும் என்று எடுத்துக்கொண்டால் இட ஒதுக்கீட்டு நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது. சமூகநீதி அடிப்படையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள் முழுமையாக நிரப்பப்படுவதில்லை. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு மண்டல் கமிசனை அமல்படுத்தியதால், பாரதிய ஜனதா கட்சி தனது ஆதரவை வி.பி.சிங் அவர்களுக்கு விலக்கிக்கொண்டது. என்றாலும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கும் சட்டத்தை இயற்றிவிட்டே சமூகநீதிக்காவலர் வி.பி.சிங் அவர்கள் இந்தியப் பிரதமர் பதவியிலிருந்து விலகினார். மண்டல் குழு அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு உரிய இடஒதுக்கீட்டை முழுமையாக இந்திய அரசு இன்னும் அமலாக்கவில்லை. அரசியல் சட்டத்திற்கு எதிராக, முன்னேறிய ஜாதிகளில் ஏழைகளுக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு எனச் சட்டத்தை இயற்றி, மிக அவசரமாக அதனை அமல்படுத்தியது இன்றைய அரசான மத்திய பி.ஜே.பி.அரசு.தங்களுக்கு எதிராக நடக்கும், சமூ கநீதிக்கு எதிராக நடக்கும், அரசாங்கத்தின் போக்கை எதிர்த்து இந்தியாவில் வலுவான போராட்டங்கள் இல்லாத நிலைமைதான் உள்ளது. ஜாதியின் பெயரால் பல கொடுமைகள் இந்தியாவில் நடக்கின்றன. என்றாலும் ஆரியர்களுக்கு எதிரான ஒரு வலுவான போராட்டம் இந்திய அளவில் எழவில்லையே! ஏன்? கருப்பின மக்கள் போல ஒன்று சேர்ந்து உரத்த குரல் கேட்கவில்லையே, ஏன்? என்னும் கேள்விக்கு இந்தியாவில் இருக்கும் ஜாதிப்படிநிலைகள்தான் என்பதே விடையாகும்.

இந்தியாவில் இருக்கும் இந்த ஜாதி அமைப்பு முறையானது ஏணிப்படி போன்று ஒன்றுக்கு மேல் ஒன்று அடுக்கி வைக்கப்பட்டுள்ள, சமமில்லாத படிநிலையாகும். தனக்குக் கீழே சில ஜாதிகள் இருப்பதை விரும்புவர்களாக இந்தியர்கள் இருக்கின்றனர். அவர்கள் தனக்கு மேலே இருக்கும் ஜாதியினர், தன்மீது செலுத்தும் ஆதிக்கத்தை அகற்றுவதைவிட, தனக்குக் கீழ் இருக்கும் ஜாதி, மேலே வருவதைத் தடுக்கும் எண்ணம் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இதனைத் திட்டமிட்டு ஆரியர்கள், தாழ்த்தப்பட்டவர்கள்-பிற்படுத்தப்பட்டவர்கள் இடையே தொடர்ந்து ஜாதி மோதல்கள் நிகழும் அளவுக்கான தத்துவத்தை, ஜாதிய முறையைத் திணித்துள்ளனர். அதனை உணரும் அளவுக்கு மக்களுக்கு, குறிப்பாக வட இந்திய மக்களுக்குஇன்னும் விழிப்புணர்வு இல்லை. "நம் நாட்டில் உள்ள தீராத கொடிய தொற்று நோய்கள் சிலவற்றுள், இந்த ஜாதி எந்த மருத்துவத்தாலும் போக்க முடியாத, மிகவும் கடுமையான தொற்று நோய்,ஆனால் தீர்க்கப்படவேண்டிய தொற்று நோயாம்.நாம் பொதுவாகத் தொற்று நோய்கள் என்று குறிப்பிடும் நோய்கள்,ஏதோ ஆயிரத்தில் அய்ந்து பேர்களுக்குத்தான் பிடித்துக்கொண்டு சீரழிக்கும். ஆனால், இந்த ஜாதி என்னும் தொற்று நோயோ, இந்தியாவில் உள்ள அய்ம்பத்திரண்டு கோடி மக்களையும் பிடித்துக்கொண்டு அவர்களைப் படாதபாடு படுத்தி வருகிறது [19] என்று பாவலேரேறு பெருஞ்சித்திரனார் குறிப்பிடுவது போல, இன்றைக்கு 130 கோடியாக இருக்கும் இந்திய மக்களை இந்த ஜாதி என்னும் கொடுமை படுத்தும் பாடு கொஞ்சமல்ல.பல நூறு பக்கங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் இந்த ஜாதியால் பட்ட கொடுமைகளை நாம் பட்டியலிடலாம். இந்த ஜாதிக்கு எதிராகத் தமிழகத்தில் களத்தில் நின்றது திராவிடர் இயக்கமும், அதன் தலைவரான தந்தை பெரியாரும் என்பது நாம் அறிந்ததே. ஆனால் தந்தை பெரியாரின் நோக்கமான முற்றிலுமாக ஜாதியை ஒழிக்கவேண்டும் என்கிற நோக்கம் இன்னும் நிறைவேறாமல் இருக்கிறது. ஜாதியை அரசமைப்புச் சட்டப்படி ஒழிக்கவேண்டும் என்பது திராவிடர் கழகத்தின் கொள்கை. தந்தை பெரியார் அவர்கள் 1957இல் நடத்திய, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை வலியுறுத்தி நடத்திய போராட்டத்தில் சிறை சென்றவர்கள்,இன்னுயிர் நீத்தவர்களின் தியாகங்கள் அளவிட இயலாதவை. "03.11.1957இல் தஞ்சையில் ஜாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும் என்கிற தீர்மானத்தை 4 இலட்சம் மக்கள் கொண்ட மாநாட்டில் ஒரே மனதாக ஆமோதிக்கச் செய்தார். 26.11.1957இல் தந்தை பெரியார் அவர்கள் ஆணைப்படி சுமார் 4,000 பேர்களுக்கு மேல் கழகத்தோழர்கள் இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்தி, 3 ஆண்டுகள்

வரை (கடினக் காவல்) தண்டிக்கப்பட்டு, சிறை புகுந்தனர். சுமார் 15 தோழர்களுக்கு மேல் இந்த ஜாதி ஒழிப்புப்போரில் சிறைக்கொடுமையால் பலியானார்கள்."[20] இடஒதுக்கீடு என்பது இடைக்கால ஏற்பாடே. "ஜாதி ஒழிப்புச் சட்டம் வரட்டும் - இட ஒதுக்கீட்டைக் கைவிடத் தயார் என்றும் "2050 ஆம் ஆண்டிலாவது ஜாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு ஒழிக்கப்படுவது குறித்து அரசு சிந்திக்கவேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கூறியுள்ளார். இட ஒதுக்கீடுக்குக் காரணமான ஜாதியை ஒழிக்கும் வகையில் சட்டம் தேவை என்று நீதிபதி கூறியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்; ஜாதியை அரசியல் சட்டப்படி ஒழிக்கட்டும், 2050 என்ன? 2040 ஆம் ஆண்டிலேயே இட ஒதுக்கீட்டை ஒழிக்க முடியும்" என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் செப்டம்பர் 9,2020 அன்று விடுதலை பத்திரிகையில் விடுத்தஅறிக்கை, ஜாதி ஒழிப்பே திராவிட இயக்கத்தின் மூச்சுக்காற்று என்பதனை உணர்த்தும்.

காலந்தோறும் போராட்டக் கருவிகள் மாறுகின்றன. எதிர்கால உலகமும் கருவிகளும் இன்றைய நிலையில் சமூக ஊடகங்களே போராட்டக் கருவிகள். திராவிட இயக்கத்தைப் பொறுத்த அளவில் பயிற்சி வகுப்புகள், தொடர் பிரச்சாரங்கள், போராட்டங்கள் எனப் பழைய முறையோடும்,இன்றையசமூகஊடகங்களின்வழியிலான போராட்டமும்,வாட்ஸ்அப் செய்திகள்,முகநூல் பதிவுகள், பெரியார் வலைக்காட்சியில் தொடர்ந்து ஒளிபரப்பப்படும் தலைவர்களின் உரைகள், கரோனா காலத்தில் சூம் **(Zoom)** வழியிலான இணையவழிப் பிரச்சாரங்கள் என்று இடைவிடாது தொடர்கின்றது. டுவிட்டரில் எத்தனையோ ஹேஷ்டேக்குகள் பிரபலமாகின்றன. ஒரு ஹேஷ்டேக் டிரெண்டிங்கில் முதலிடம் வந்ததும், அடுத்த நாள் அடுத்த ஹேஷ்டேக் பதியப்படுகிறது. இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பிரச்சனைகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஹேஷ்டேக்காக பதிவிடுவதற்குப் பதிலாக, 2013 இல் ஆரம்பித்து இன்றுவரை **#Black lives matter** என்னும் ஹேஷ்டேக்கின் கீழ், கருப்பின மக்களின் துன்பங்களும்,துயரங்களும், என்ன தீர்வு என்பதற்கான விவாதங்களும் தொடர்ந்து நடைபெறுவது இந்தக்கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கத்தின் வெற்றி எனலாம்.தங்களது கொள்கையை, போராட்டத்தை ஓர் ஒற்றை ஹேஷ்டேக் மூலமாக உலகில் வாழும் மக்கள் அனைவரின்கவனத்திற்கும்கொண்டுசென்றது'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கத்தின் வெற்றியாகும். "எல்லோருக்கும் எல்லாம்; அனைவருக்கும் அனைத்தும்" என்பதுதான் திராவிட இயக்கத்தின் இறுதிக் குறிக்கோளாகும்.பெண் விடுதலை நோக்கில் திராவிட இயக்கத்தின் சாதனைகள் குறிப்பிடத்தக்கவை. அனைவரும் பொது உரிமை, பொது உடைமை அடிப்படையில் சமமாக வேண்டும் என்பதுதான் திராவிட இயக்கம் அடையத் துடிக்கும் இலட்சியமாகும். திராவிடர் சங்கம் தொடங்கி 106ஆண்டுகள் கடந்திருக்கின்றன. திராவிட இயக்கத்தினால் அடைந்த பயன்கள் எண்ணிலடங்காதவை. ஆனால் இன்னும் போகவேண்டிய தூரம் இருக்கிறது. உலகம் பொதுவுரிமை, பொதுவுடைமை உலகமானால், 'எல்லோருக்கும் எல்லாம் - அனைவர்க்கும் அனைத்தும்' என்னும் இலட்சியம் நிறைவேறும்.அதை நோக்கிய பயணத்தைத் திராவிட இயக்கம், குறிப்பாக இன்றைய நிலையில் திராவிடர் கழகம் அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது, போராட்டம், பிரச்சாரம் என்னும் வழிமுறைகளால்! திராவிட இயக்கத்தின் குரல் டெல்லியில் உள்ள மக்களைவையில், புதிய உறுப்பினர்களின் பதவி ஏற்பின்போது எதிரொலித்தது. இந்தக் குரல் உலகம் முழுவதும் கேட்பதற்கான ஹேஷ்டேக்குகளைச் சமூக ஊடகங்களில் உருவாக்க வேண்டும். உலகத்தில் எந்தப் பகுதியில் திராவிடர்கள், தமிழர்கள் பாதிக்கப்பட்டாலும், ஜாதிக்கொடுமையும் நிறவெறிக்கொடுமையும் ஒன்றே என்பதனை உலக மக்கள் உணரவேண்டும். அப்படி உணரும்போது ஜாதி ஒழியும். புதிய உலகம் உருவாகும். கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கம் தங்கள் இணையதளத்தில், உலகம் முழுவதும்இருக்கும்கருப்பினத்தவர்களை,நாட்டுப்பற்று என்னும் கோட்டைத் தாண்டி ஒருங்கிணைப்பதே தங்கள் குறிக்கோள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு மொழிப்பற்றோ, இனப்பற்றோ, நாட்டுப்பற்றோ கிடையாது, மானுடப்பற்று மட்டுமே உண்டு என்னும் தந்தை பெரியாரின் சொற்களைத்தான் 'கருப்பின உயிர்களும் உயிர்களே' இயக்கமும் குறிப்பிடுவதாகக் கருதுகின்றேன். மனித அறிவீனத்தினால் விளைந்த வேதனைகளை மனித அறிவினாலேயே நீக்கிவிடமுடியும்" என்ற தந்தை பெரியாரின் கருத்தின்படி, மனித அறிவீனத்தால் விளைந்த நிறவெறியும், ஜாதி வெறியும் மனித அறிவினாலேயே நீக்கப்படும் என்னும் எதிர்கால உலகத்தை நோக்கி நடைபோடும் இயக்கங்களாக,திராவிடஇயக்கமும் கருப்பின உயிர்களும் உயிர்களே இயக்கமும் விளங்குகின்றன.

**அடிக்குறிப்புகள்:**

1. திராவிட இயக்க வரலாறு தொகுதி -1 முரசொலி மாறன், சூரியன் பதிப்பகம், சென்னை-4, பக்கம்-17
2. 'கருப்பு அடிமைகளின் கதை 'UNCLE TOM'S CABIN' 'ஹேரியட் பீச்சர் ஸ்டவ், தமிழில் வான் முகிலன், அலைகள் வெளியீட்டகம், சென்னை - 24 முதல் பதிப்பு 2003. பக்கம்-5
3. மேலது, பக்கம் - 6
4. "பெரியார் திராவிடம் இந்துத்துவம் ' தொகுப்பாசிரியர் முனைவர் சகாயராஜ், வைகறை பதிப்பகம் திண்டுக்கல், பக்கம்- 21
5. "பெரியார் களஞ்சியம் ஜாதி தீண்டாமை பாகம்(14)" தந்தை பெரியார் -10.09.1949-ல் குடி அரசில் எழுதிய கட்டுரை, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார வெளியீடு, சென்னை-7,பக்கம் - 24,
6. "வருண ஜாதி உருவாக்கம்' - குவெ.கி. ஆசான், திராவிடர் கழக வெளியீடு, சென்னை-7.
7. கீதையின் மறுபக்கம் (சுருக்கப்பட்ட புதிய பதிப்பு), - கி.வீரமணி, திராவிடர் கழக வெளியீடு, சென்னை-7 பக்கம்- 34
8. பார்ப்பனீயத்தின் வெற்றி-பி.ஆர். அம்பேத்கர், சமூக நீதி பதிப்பகம், திருப்பூர்- 02, முதல் பதிப்பு ஜூலை 1992. பக்கம் 52,53
9. "திராவிட இயக்க வரலாறு " முரசொலி மாறன், சூரியன் பதிப்பகம், சென்னை-4, மூன்றாம் பதிப்பு,நவம்பர் 2012,பக்கம் 46-47
10. பார்ப்பனீயத்தின் வெற்றி, பி.ஆர்.அம்பேத்கர், சமூக நீதி பதிப்பகம், திருப்பூர்-02, முதல் பதிப்பு ஜூலை 1992.பக்கம் - 58
11. "வருண ஜாதி உருவாக்கம்' கு.வெ.கி.ஆசான், திராவிடர் கழக வெளியீடு, சென்னை-7.
12. 'கருப்பு அடிமைகளின் கதை 'UNCLE TOM'S CABIN' 'ஹேரியட் பீச்சர் ஸ்டவ்,தமிழில் வான் முகிலன், அலைகள் வெளியீட்டகம், சென்னை -24 முதல் பதிப்பு 2003. பக்கம்- 21
13. "நூற்றாண்டு காணும் நீதிக்கட்சியும் 90-ஆம் ஆண்டு காணும் சுயமரியாதை இயக்கமும் சாதித்தது என்ன?, "கி.வீரமணி,திராவிடர் கழக வெளியீடு,சென்னை-7 பக்கம் 16, 29-30
14. மேலது, பக்கம் 29-30
15. "சிந்து வெளிப்பண்பாட்டின் திராவிட அடித்தளம்", ஆர்.பாலகிருஷ்ணன், பாரதி பதிப்பகம், 2017, பக்கம் -14
16. மேலது, பக்கம்-31
17. கீழடி வைகை நதிக்கரையில் சங்க கால நகர நாகரிகம்.. தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு, பக்கம் XII
18. உண்மை இதழ் (அக்டோபர் 16-31,2020)... கோ. ஒளிவண்ணன், பக்கம்46-47
19. "சாதி ஒழிப்பு " பாவலரேறு பெருஞ்சித்திரனார், தென்மொழி பதிப்பகம், சென்னை-100. 2ஆம் பதிப்பு, தி.பி.2046, சிலை (ஜனவரி, 2015), பக்கம்-32
20. நூற்றாண்டு காணும் நீதிக்கட்சியும் 90ஆம் ஆண்டு காணும் சுயமரியாதை இயக்கமும் சாதித்தது என்ன? "கி.வீரமணி, திராவிடர் கழக வெளியீடு, சென்னை-7, பக்கம் 91

**ஆசிரியர்குறிப்பு:**

முனைவர். நேரு, தமிழகப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத்தின் மாநிலத் தலைவர் ஆவார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழிலக்கியத் துறையில், இறையன்பு படைப்புகளில் தன்னம்பிக்கையும் மனித நேயமும்' என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். பெரியார் பட்டயச் சான்றிதழும் பெற்றவர். பி.எஸ்.என்.எல் நிறுவனத்தில் அதிகாரியாகப் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்ற இவர், தமிழ்நாட்டில் மதுரை மாவட்டம் சாப்டூரில் பிறந்தவர். இவர், 'பங்குனி உத்திரமும் பள்ளிக்கூடமும்', 'சூரியக்கீற்றுகள்' எனும் இரண்டு கவிதைத் தொகுப்புகளும், 'நெருப்பினுள் துஞ்சல்' எனும் சிறுகதைத் தொகுப்பையும் எழுதி வெளியிட்டுள்ளார். திருக்குறள் வலியுறுத்தும் உயிர்ச்சூழலும் இன்றைய உலகச்சூழலும்', 'கடவுளையும் சடங்குகளையும் வள்ளுவம் புறக்கணிக்கிறது', 'தமிழ்த் துறவிகளும் வள்ளுவர் கூறும் தவமும்', 'ஆரிய எதிர்ப்புக்கு முன்னுரை-திருக்குறளின் பாயிரம்', 'செல்வமும் குடிமையும்', 'ஊழும் கூழும் பகுத்தறிவுப் பார்வை' போன்ற தலைப்புகளில் இவரின் கட்டுரைகள் திருக்குறள் ஆய்வுத் தொகுப்புகளில் வெளிவந்துள்ளன. உலக/இந்திய மாநாடுகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகள் அளித்தவர். பல்வேறு இலக்கிய இதழ்களிலும், சமூக இதழ்களிலும், இணையத்திலும் பரவலாக எழுதி வருபவர். ♦